# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=    இதழ் - 48    17.12.2023



கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மட்டக்களப்பின் பொருளாதாரம் 02

குடிசை கைத்தொழில் ஆரம்பித்து பிரபல தொழிலதிபரானது எப்படி? 12

மலைவேம்பு வளர்ப்பு முறை 16

# கடவுச் சீட்டைப் பெறுவதில் எந்தற்காக இந்த நெருக்கடி?

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மட்டக்களப்பின் பொருளாதாரம்

நேர்கண்டவர் - பி.பார்த்தீபன்

“மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஆறரை இலட்சத்திலிருந்து ஏழு இலட்சம் வரையிலான பசுக்கள் இருக்கின்றன. அதிலும் மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் நான்கு இலட்சம் பசுக்கள் இருக்கின்றன. தினமும் 80 ஆயிரம் முதல் 90 ஆயிரம் லீட்டர் வரையிலான பால் தென் பகுதியிலுள்ள நெஸ்லே போன்ற கம்பனிகளுக்கு அனுப்பப்பட்டது. மயிலத்தமடு, மாதவனை பகுதிகளிலிருந்து மட்டும் தினசரி 10 ஆயிரம் லீட்டர் பால் வெளிமாவட்டங் களுக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தது” எனச் சுட்டிக்காட்டுகிறார் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக ஒன்றித்தின் தலைவரும்பொத்துவில்முதல்பொலிகண்டி வரை (P2P) அமைப்பின் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளருமான சிவயோகநாதன் சீலன்.

மட்டக்களப்பின் இந்தப் பொருளாதாரத்தின் முக்கியத்துவம் மற்றும் அதனைச் சீரழிப்பதற்காக திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படும் முயற்சிகளைக் குறித்தும் அவர் விபரித்தார். இது தொடர்பில் “தமிழர் பொருண்மியம்” வார இதழுக்கு அவர் தந்த பேட்டியின் முக்கிய பகுதிகளை வாசகர்களுக்காக இந்த வாரம் தருகின்றோம்.

**கேள்வி -** மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட மேய்ச்சல் தரை விவகாரம் ஒரு தொடர் பிரச்சினையாக இருக்கின்றது. தற்போது அங்குள்ள நிலை எவ்வாறுள்ளது?

**பதில் -** மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் வெளிமாவட்டங்களிலிருந்து வந்து அத்துமீறி பயிர்ச்செய்பவர்களை வெளியேற்றுமாறு நீதிமன்றம் கடந்த 13 ஆம் திகதி உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருந்தது. ஆனால், அவர்கள் அந்த இடங்களிலிருந்து வெளியேறாமல் அதே இடங்களிலிருந்து தமது காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். பொலிஸார் அங்கு அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கின்றார்கள்.

இதுதான் தற்போதைய நிலைமை. சட்டம் எதைச் சொன்னாலும் அது பெரும்பான்மை இனத்துக்கு ஒரு விதமாகக் கையாளப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு மற்றொரு வகையாகக் கையாளப்படுகின்றது என்பதுதான் உண்மையான நிலை.

2020 ஆம் ஆண்டிலும் இது போன்ற ஒரு தீர்ப்பு கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. அத்துமீறி காணிகளை ஆக்கிரமித்துள்ள சிங்களவர்களை வெளியேற்ற வேண்டும் என அப்போதும் மகாவலி அதிகார சபைக்கு உயர் நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தது. அதன்



சிவயோகநாதன் சீலன்

அடிப்படையில் அங்கிருந்த விகாரை ஒன்றும் அகற்றப்பட்டு, அங்கிருந்தவர்களும் வெளியேற்றப்பட்டனர்.

ஆனால், ஆட்சியாளர்களின் துணையுடன் இந்த ஆக்கிரமிப்பு மீண்டும் இடம் பெறுகின்றது. 400 க்கும் அதிகமான வெளிமாவட்டச் சிங்கள மக்கள் இந்தக் காணிகளில் பயிர்செய்கின்றார்கள். தமிழ் மக்களுடைய கால்நடைகள் அவை வழமையாக மேயும் இடத்துக்குச் செல்லும் போது, ஆக்கிரமிப்பாளர்களால் சட்டவிரோதமாகப் பெறப்பட்ட மின்சாரத்தில் சிக்குண்டு மரணத்தைத் தழுவிக்கொள்கின்றன.

இதனைவிட, தமிழ் மக்களுடைய பசுக்களை வாளால் வெட்டுவது, துப்பாக்கியால் சுடுவது, வாய் வெடி போன்றவற்றைப் பயன்படுத்தி அவர்கள் கொல்கின்றார்கள்.

இதுபோன்ற கொடூரங்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. 2013 க்குப் பின்னர் இவ்வாறு ஐயாயிரத்துக்கும் அதிகமான பசுக்கள் கொல்லப்பட்டுள்ளன. இதனைவிட பெருமளவு பசுக்கள் கடத்தப்பட்டுள்ளன. இது போல தமிழ்ப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பதற்கான செயற் பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால்தான், மயிலத்தமடு, மாத வனை பகுதி மக்கள் இப்போது 85 நாட் களையும் தாண்டி கவனயீர்ப்புப் போராட் டத்தை சித்தாண்டிப் பகுதியில் முன்னெ டுத்து வருகின்றார்கள். இருந்தபோதிலும், அவர்களுக்கான தீர்வு எதுவும் இதுவரை யில் வழங்கப்படவில்லை. ஜனாதிபதி கூட உயர் மட்ட அதிகாரிகளை அழைத்து சில உத்தரவுகளை பிறப்பித்திருந்தார். அதே போல நீதிமன்ற உத்தரவுகளும் உள்ளன. ஆனால், சட்டத்தையும், நீதியையும் நிலை நாட்ட வேண்டிய பொலிஸார் அதனைக் கண்டும் காணதது போல, அதற்குப் பின் னால் இருக்கின்ற நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பவர்களாகவே நடந்துகொண் டிருக்கின்றார்கள். இதனால், பண்ணையா ளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக் கப்பட்டுள்ளது.

இன்று சுமார் நான்கு மாத காலமாக அவர்கள் பால் கறக்காமல் வீதியோரங்க ளில் இருந்து போராடிக்கொண்டிருக்கின் றார்கள்.

**கேள்வி -** நான்கு மாத காலமாக அவர் கள் தொழில் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது கால நடை கள் கொல்லப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில், அவர்களுடைய வாழ்வாதாரம் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது?

**பதில் -** அந்தக் குடும்பங்களின் தாய்மார் கண்ணீருடன்தான் நிற்கின்றார்கள். தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். அதனைவிட ஒரு வேளை உணவுக்குக்கூட பணம்இல்லாமல் அவர்கள் சிரமப்படுகின்றார்கள். எந்தவித மான அத்தியவசியத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாதவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள்.

அவர்களுடைய வாழ்வாதாரம் முற்று முழுதாகவே பாலை நம்பியதாகத்தான் இருந்தது. பாலை எடுப்பதற்கு பசுக்களுக்கு மேய்ச்சல் தரை இல்லாததால் மலைப் பிரதேசங்களுக்குள்ளும், பற்றைக்காடுகளுக் குள்ளும் சென்றுகொண்டிருக்கின்றன. இதனால், பால் எடுக்கக்கூடியளவுக்கு அவற்றின் நிலை இல்லை. ஓர் இடத்தில் பசுக்க ளைக் கொண்டுவந்து கட்டி பாலை எடுக்கும்நிலைஇல்லை. சிங்களவர்களுடைய அச்சுறுத்தல் காரணமாக அதனைச் செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருக்கின் றார்கள்.

இதனைவிட அங்கு பொலிஸ் சாவடி ஒன்று அமைக்கப்பட்டிருப்பதால் அவர்க ளுடைய நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள் ளது. அதனால், அவர்கள் வெளியே செல்ல முடியாது. தென்பகுதியிலிருந்தும் கூட யாரும் அந்தப் பகுதிக்குள் வர முடியாது. ஊடகவியலாளர்கள் கூட அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இதனால், சுதந்திரமாக அவர்களால் செயற்பட முடிய வில்லை.

இதனால், அடிமைப்பட்ட ஒரு நிலை யில்தான் அவர்கள் உள்ளார்கள். மறுபுறத் தில் சட்டவிரோத ஆயுதங்களுடன் மற்றொரு குழுவினர் சுதந்திரமாக நடமாடுகின்றார் கள். இதனால், சுயபதீனமாகப் பாலை எடுத்து விற்பனை செய்யக்கூடிய நிலையில் தமிழ்ப் பண்ணையாளர்கள் இல்லை. பாலை சேகரிக்கின்ற வாகனங்கள் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை.

இவ்வாறு தமிழர்களுடைய பொருளா தாரத்தை திட்டமிட்ட முறையில் முறிய டிக்கின்ற அல்லது இல்லாமல் செய்வதற் காக அவர்கள் இவற்றை செய்துவருகின் றார்கள்.

**கேள்வி -** கால்நடை வளர்பு, பால் உற் பத்தி என்பன கிழக்கு மாகாண தமிழர்க ளின் பொருளாதாரத்தில் எந்தளவுக்கு முக்கியமான இடத்தைப் பெறுகின்றன?

**பதில் -** மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஆறரை இலட்சத்திலிருந்து ஏழு இலட்சம் வரையிலான கால்நடைகள் இருக்கின்றன. அதிலும் மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் நான்கு இலட்சம் கால்நடைகள் இருக்கின்றன. இந்தக் கால் நடைகளிலிருந்து தினமும் 80 ஆயிரம் முதல் 90 ஆயிரம் லீட்டர் வரையிலான பால் தென்பகுதியிலுள்ள நெஸ்லே போன்ற கம்பனிகளுக்கு அனுப்பப்பட்டது. மயிலத் தமடு, மாதவனை பகுதிகளிலிருந்து மட் டும் தினசரி 10 ஆயிரம் லீட்டர் பால் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுக் கொண் டிருந்தது.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்ன வென்றால், இது நாட்டின பசுக்களிடமிருந்து பெறப்படும் (ஓர்கானிக்) பால். இது மரபணு மாற்றங்கள் எதுவும் செய்யப்படாமலுள்ள நாட்டின பசுக்களிடமிருந்து பெறப்படும் பால். இதனால், இதன் சுவை அதிகமாக இருக்கும். இதனால்தான் தென்பகுதி நிறு வனங்களிடம் இந்தப் பாலுக்கு சிறப்பான வரவேற்பு இருக்கின்றது.

இதேவேளையில், மிகவும் குறைந்த விலைக்குத்தான் இந்தப் பாலை அவர்கள் கொள்வனவு செய்கின்றார்கள். மட்டக்க ளப்பு மாவட்டத்தில் ஒரு லீட்டர் தண்ணீரின் விலை 130 ரூபா. ஆனால், ஒரு லீட்டர் பாலின் விலை 120 ரூபா. தண்ணீருக்குள்ள மதிப்புகூட பாலுக்கு இல்லாத நிலைதான் மட்டக்களப்பில் காணப்படுகின்றது. அத னைக்கூட அவர்கள் அனுமதிக்காத ஒரு நிலைதான் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த

> கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கால்நடை வளர்ப்பு, மீன் பிடி, விவசாயம் ஆகிய மூன்றும்தான் பிரதான தொழில்களாக இருக்கின்றன. அதிலும் கால் நடை என்றால், எருமை மாடுகளை வளர்ப்பதில் கிழக்கு மாகாணம் மிகவும் முன்னேறிய ஒரு பிரதேசமாக இருக்கின்றது. இருந்த போதிலும், அரச ஆதரவுடன் அதனை அழித்தொழிக்கும் வகையில் இனவாத நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் செயற்பாடு மட்டக்களப்பின் பொருளாதாரத்துக்கு பெரும் அச்சுறத்தலாக அமைந்துள்ளது.

வரையில் கால்நடை வளர்ப்பு, மீன் பிடி, விவசாயம் ஆகிய மூன்றும்தான் பிரதான தொழில்களாக இருக்கின்றன. அதிலும் கால் நடை என்றால், எருமை மாடுகளை வளர்ப்பதில் கிழக்கு மாகாணம் மிகவும் முன்னேறிய ஒரு பிரதேசமாக இருக்கின் றது. இருந்தபோதிலும், அவர்களுக்கு நிரந்தரமான ஒரு விலை நிர்ணயம் செய்ய முடியாத ஒரு நிலை காணப்படுகின்றது. அதனைவிட, மேய்ச்சல் தரையை அவர்கள் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலமாக அந்தப் பொருளாதாரத்தை மேம்படுத்துவ தற்கான திட்டங்களும் இல்லை.

நாட்டின் பொருளாதாரம் மோசமாக இருக்கின்றது, உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், கிழக்கிலுள்ள இந்த பால் பொரு ளாதாரம் பலமான ஒன்றாக இருக்கின்ற போதிலும், அது தமிழர்களின் கைகளில் இருப்பதால் அதனை மேம்படுத்துவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் அரசாங் கத்தினால் எடுக்கப்படுவதில்லை.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# தனியார் துறைக்கும் சம்பள அதிகரிப்பு?

பொருளாதார நெருக்கடியால் கடுமையான நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் மக்களுக்குக் கிடைத்துள்ள ஒரே நிவாரணம் சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பட்ஜெட்டில் வெளியிட்ட சம்பள அதிகரிப்பு குறித்த அறிவிப்புத்தான். தொழிற்சங்கங்கள் இருபதாயிரம் ரூபா அதிகரிப்பைக் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையில், பத்தாயிரம் ரூபாவை அதிகரிப்பதாகவே ஜனாதிபதி அறிவித்திருந்தார். வாழ்க்கைச் செலவும் விலைவாசியும் அதிகரித்திருக்கும் விகிதத்தைப் பார்க்கும்போது, இது ஆனைப் பசிக்கு சோளப் பொரிதான்!

இந்த சம்பள அதிகரிப்பு கூட உடனடியாகக் கிடைக்கப்போவதில்லை. ஏப்ரல் மாதத்தில்தான் கிடைக்கும் எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. சம்பள அதிகரிப்பைக் கோரி போராட்டக் களத்தில் குதிப்பதற்குத் தயாராகிக்கொண்டிருந்த தொழிற்சங்கங்களின் முயற்சிக்கு இந்த அறிவிப்பு ஆப்பு வைத்துள்ளது. மீண்டும் அரகலய போன்ற ஒரு மக்கள் கிளர்ச்சி இடம்பெறுவதைத் தடுப்பதுதான் ஜனாதிபதியின் நோக்கமாக இருந்துள்ளது. அதில் ஜனாதிபதி ஓரளவுக்கு வெற்றிபெற்றிருக்கின்றார் என்றும் சொல்ல முடியும்.

பட்ஜெட் குறித்த வாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வரும் நிலையில், மற்றொரு கோரிக்கை இப்போது முன்வைக்கப்பட்டிருக்கின்றது. தனியார் துறையினரும் தமது பணியாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்பதுதான் அந்தக் கோரிக்கை. அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வை அரசாங்கம் அறிவிக்கலாம். ஆனால், தனியார் துறையினர் சம்பள உயர்வை உயர்வை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மட்டுமே அவர்களால் முன்வைக்க முடியும். ஜனாதிபதியும் அவ்வாறான வேண்டுகோள் ஒன்றைத்தான் முன்வைத்திருக்கின்றார்.

அரசாங்கத் துறைகளைப் போலவே தனியார் துறையிலும் கணிசமான ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள். சுமார் 65 இலட்சம் பணியாளர்கள் தனியார் துறையில் பணியாற்றுகின்றார்கள். தற்போதைய நெருக்கடியான பொருளாதார நிலையில் இவர்களைப் புறக்கணித்துவிட்டு சென்றுவிட முடியாது. தேர்தல்கள் எதிர்கொள்ளப்படும் நிலையில் இவர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் போருவதன் பின்னணியில் அரசியல் இருக்கலாம். ஆனால், முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம் இது!

மின்சாரக் கட்டணம் சுமார் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. இந்தப் பின்னணியில் தமது வாழ்வாதரத்தை முன்னெடுக்க குறைந்தபட்ச நிவாரணமாவது தனியார் துறையினருக்கும் வழங்கப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடி தனியார் துறையையும் பாதித்துள்ளது என்பது உண்மை. ஆனால், தமது பணியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அவர்கள் தட்டிக்கழித்துவிட முடியாது!

# அன்புள்ள ஆசிரியருக்கு....



## திப்பிலியா மீன் வளர்ப்பு

இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவாக இருந்தாலும் நன்னீர் மீன் வளர்ப்பு பொருளாதாரத்தில் முக்கியமானதாக இருக்கின்றது. அது தொடர்பாக கடந்த வாரம் நீங்கள் வெளியிட்டிருந்த கட்டுரை மிகவும் சிறப்பானதாக பயனுள்ளதாக இருந்தது. உள்ளூரில் மீன்வளர்ப்பில் ஈடுபட விரும்புபவர்களுக்குத் தேவையான தகவல்களை கட்டுரையாளர் மிகவும் இலகுவான முறையில் வெளிப்படுத்தியிருக்கின்றார். உள்ளூர் பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு கட்டுரையாக இது உள்ளது. இந்த முயற்சி நிச்சயமாக ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**எம்.கணேசராஜா, யாழ்ப்பாணம்.**

●●●

## விலங்குகளின் முக்கியத்துவம்

டொக்டர் கிருபானந்தகுமாரன் எழுதிய ஆட்டிசம் நோயும் விலங்குகளும் என்ற கட்டுரை பல புதிய தகவல்களை எமக்குத் தந்திருந்தது. ஆட்டிசம் நோயைக் குணமாக்குவதில் விலங்குகள் வகிக்கக்கூடிய முக்கியமான பங்களிப்பை இதில் கட்டுரையாளர் தெளிவாக விளக்கியிருக்கின்றார். மனிதர்களின் நண்பர்களாக உள்ள விலங்குகளை நாம் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதற்கு இந்தக் கட்டுரை சிறந்த உதாரணம். வீட்டில் செல்லப் பிராணிகளாக இருக்கும் விலங்குகள் மனிதர்களுக்கு எந்த ளவுக்கு பயனுள்ளவையாக இருக்கின்றன என்பதை கட்டுரையாளர் விளக்கியிருக்கின்றார். வாழ்த்துகள்.

**கீதா பொன்னம்பலம், வவுனியா.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1900 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 3800 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-----------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - --------------------------------------------------------

**முகவரி** - ------------------------------------------------------

**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------------

**சந்தாக் காலம்** - ----------------------------------------------

**செலுத்திய தொகை** - ------------------------------------------

**செலுத்திய திகதி** - -------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,72,050 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,87,700 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் எந்தளவுக்கு வெற்றியளிப்பதாக அமைந்துள்ளன?

**தவராஜா சுதன்**
**மானிப்பாய்**

**பதில் -** பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அரசாங்கம் ஆக்கபூர்வமாக எதனையாவது செய்திருக்கின்றதா என்பது தான் முதலாவது கேள்வி. இதற்காக நிச்சயமாக இறக்குமதிகளைக் குறைத்து ஏற்றுமதிகளை அதிகரித்திருக்க வேண்டும். இதற்கான உபாயம் ஒன்றை அரசாங்கம் வகுத்திருக்க வேண்டும்.

ஆனால், இறக்குமதிகள் இப்போது திறந்துவிடப்பட்டுள்ளன. டொலர் தொடர்ந்தும் வெளியே செல்கின்றது. டொலரின் பெறுமதி அதிகரித்திருப்பதற்கு அதுவும் ஒரு காரணம். ஏற்றுமதி வருமானம் கூட குறைவடைந்து செல்வதைச் சில தினங்களுக்கு முன்னர் வெளிவந்த செய்தி ஒன்று உறுதிப்படுத்துகின்றது. அந்தச் செய்தி இது தான் -

"2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஒக்ரோபரில் இலங்கையின் ஏற்றுமதி 14.6 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெறுமதியின் அடிப்படையில் 898.0 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், செப்ரெம்பர் 2023 இல் பதிவு செய்யப்பட்ட மதிப்புடன் ஒப்பிடும்போது இது 13.13 வீதக் குறைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஆடை, இறப்பர், இறப்பர் சார்ந்த பொருட்கள், தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருட்களில் ஏற்றுமதி தேவை குறைவதால் பொருட்களின் ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உணவு மற்றும் பானங்களின் ஏற்றுமதி வருவாய் 2023 ஒக்ரோபரில் 20.77வீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 2022 ஒக்ரோபருடன் ஒப்பிடுகையில், 2023 ஒக்ரோபரில் கடல் உணவுகளின் ஏற்றுமதி வருவாய் 3.73 வீதம் அதிகரித்து 20.29 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

மேலும், அலங்கார மீன்களின் ஏற்றுமதி வருமானம் ஒக்ரோபர் 2022 உடன் ஒப்பிடும்போது 2023 ஒக்ரோபரில் 35.71 வீதம் அதிகரித்து 2.47 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது."

இதுதான் அந்தச் செய்தி. அதாவது ஒரு சில ஏற்றுமதிகள் அதிகரித்திருந்தாலும், பரவலாக அதிகரிக்கவில்லை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அதற்காக உருப்படியான திட்டம் ஒன்றை வகுத்து அதனைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என்பதுதான் உண்மை. இந்த நிலையில், பொருளாதாரத்தில் பெருமெடுப்பிலான முன்னேற்றத்தை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

## கேளுங்கள் தருகின்றோம்

**தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -**
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 450/= |
| உருளைக்கிழங்கு | - 300/= |
| பச்சைமிளகாய் | - 1200/= |
| தக்காளி | - 700/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 120/= |
| கோவா | - 400/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 180/= |
| புடோல் | - 320/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 420/= |
| பெரிய வெங்காயம் | - 350/= |
| பாகற்காய் | - 700/= |
| வெண்டிக்காய் | - 280/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 350/= |
| லீக்ஸ் | - 350/= |
| கறிமிளகாய் | - 700/= |
| முருங்கைக்காய் | - 1200/= |
| போஞ்சி | - 350/= |
| கீரை - 1 பிடி | - 160 |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 211/= |
| கனடா டொலர் - | 235/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 346/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர்டொலர் - | 246/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 403/= |
| சுவிஸ் பிராங் - | 365/= |
| அமெரிக்க டொலர் - | 322/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 221/= |
| கனடா டொலர் - | 246/= |
| சீன யுவான் - | 47/= |
| யுரோ - | 360/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 249/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 420/= |
| சுவிஸ் பிராங் - | 382/= |
| அமெரிக்க டொலர் - | 332/= |

# வெகுமதி புள்ளிகள் வாடிக்கையாளர் மீதான அக்கறையா?



- ஸ்ரீனிவாசன் சுப்ரமணியன் -

**வெகுமதி புள்ளிகள் நன்மைகள் மற்றும் தீமைகள் இரண்டையும் கொண்டு வருகின்றன. மேலும் இதுபோன்ற திட்டங்களில் பங்கேற்பதற்கான முடிவை உங்கள் தனிப்பட்ட நிதி நிலைமை மற்றும் இலக்குகளை கருத்தில் கொண்டு எடுக்கப்பட வேண்டும்.**

பல வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்குகின்றன. அவற்றில் மிகவும் பிரபலமான ஒன்று வெகுமதி புள்ளிகள் (Reward Points).

இவை வங்கிகளின் கடன் அட்டைகள் மூலம் பொருட்கள் வாங்குவதை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. எனினும், இது உண்மையிலேயே பலனளிக்குமா? அல்லது அவை ஒரு வகையான மோசடியா என்ற கேள்வி எழுகிறது. இது பற்றி பார்ப்போம்.

வங்கிகள் தங்கள் கடன் அட்டைகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக வெகுமதி புள்ளிகளை வழங்குகின்றன. இந்த புள்ளிகள் குவிந்து, வாடிக்கையாளர் மற்றும் வங்கி இரு தரப்புக்கும் பலன் கிடைக்கிறது. வாடிக்கையாளர்கள் வெகுமதிகளைப் பெறுகிறார்கள், அதேநேரம் வங்கிகள் தங்கள் பரிவர்த்தனை அளவையும், பெரும்பாலும் வட்டி வருமானத்தையும் அதிகரிக்கின்றன.

வெகுமதி புள்ளிகள் மூலம் பணத்தைச் சேமிப்பதற்கான வாய்ப்பு மற்றும் சில பொருட்கள் மற்றும் சேவை மீது தள்ளுபடியைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. கடன் அட்டை அல்லது சேமிப்பு கணக்கைப் பொறுத்து, இந்தப் புள்ளிகளை பணம் திருப்பப் பெறுதலாக மீட்டெடுக்கலாம். அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையைக் குறைக்கப் பயன்படுத்தலாம்.

### பயணச் சலுகைகள்:

சில வங்கி வெகுமதி திட்டங்கள் விமானப் பயணம் அல்லது விடுதியில் தங்குவதற்கு பலன்களை வழங்குகின்றன. இந்தச் சலுகைகள் பயணத்தை மிகவும் மலிவானதாகவும் மற்றும் தனிநபர்களுக்கு அணுகக்கூடியதாகவும் மாற்றும்.

### பிரத்தியேக சலுகைகள்:

சில வெகுமதி திட்டங்கள் குறிப்பிட்ட நிகழ்வுகள், ஷொப்பிங் ஒப்பந்தங்கள் மற்றும் பிற சலுகைகளுக்கான பிரத்தியேக அணுகலை வழங்குகின்றன. இது உங்களை ஒரு மதிப்புமிக்க வாடிக்கையாளராக உணரவைக்கும்.

### பணம் திரும்ப பெறுதல்:

பல வெகுமதி திட்டங்கள் பணம் திரும்பப் பெறுதல் விருப்பங்களை வழங்குகின்றன. இது வாடிக்கையாளர்கள் செலவழித்த பணத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை திரும்பப் பெற அனுமதிக்கிறது.

### மறைக்கப்பட்ட செலவுகள்:

பல திட்டங்கள் வெகுமதிகளின் மதிப்பை ஈடுசெய்யக்கூடிய மறைக்கப்பட்ட செலவுகளுடன் வருகின்றன. இதில் வருடாந்திர கட்டணம், கடன் அட்டைகளுக்கான அதிக வட்டி விகிதம் அல்லது புள்ளிகளைப் பெறுவதற்கான குறைந்தபட்ச செலவு தேவைகள் ஆகியவை அடங்கும்.

### உயர்-வட்டி விகிதங்கள்:

வெகுமதி திட்டங்களுடன் கூடிய கடன் அட்டைகள் நிலையான கடன் அட்டைகளுடன் ஒப்பிடும்போது அதிக வட்டி விகிதங்களுடன் வருகின்றன. வாடிக்கையாளர்கள் தங்கள் கடன் அட்டையில் அதிகம் இருப்பு வைத்திருந்தால், அவர்கள் வெகுமதிகளில் பெறுவதை விட வட்டிக் கட்டணங்களில் அதிக கவனம் செலுத்தலாம்.

### புள்ளிகள் மதிப்பிழப்பு:

காலப்போக்கில், சில வங்கிகள் தங்கள் வெகுமதி புள்ளிகளை மதிப்பிழக்கச் செய்யலாம். இதனால் வாடிக்கையாளர்கள் அர்த்தமுள்ள பலன்களுக்காக அவற்றைப் பெறுவது கடினமாகிறது. பயன்படுத்தும் விதிகளில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும்.

### சிக்கலான விதிமுறைகள்:

வெகுமதி திட்டங்கள் பல்வேறு விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் பெரும்பாலும் சிக்கலானவையாக உள்ளன. வாடிக்கையாளர்கள் இந்தத் திட்டங்களின் நுணுக்கங்களை ஆராய்வதும், அதன்படி நடப்பதும் சவாலாக இருக்கலாம். சரியான வெகுமதி புள்ளிகள் திட்டத்தைத் தீர்மானிப்பது உங்கள் நிதி இலக்குகள், செலவு செய்யும் பழக்கம் மற்றும் விருப்பங்களைப் பொறுத்தது.

### சரியான திட்டத்தைக் கண்டறிய..

* உங்கள் செலவுப் பழக்கத்தை மதிப்பிடுங்கள்
* விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் புரிந்து கொள்ளுங்கள்
* வங்கிகளுக்கிடையே உள்ள வெகுமதி புள்ளி திட்டங்களை ஒப்பிடுங்கள்
* பயன்படுத்தும் நெகிழ்வுத்தன்மை மற்றும் செலவுகளைக் கவனியுங்கள்.

வெகுமதி புள்ளிகள் நன்மைகள் மற்றும் தீமைகள் இரண்டையும் கொண்டு வருகின்றன. மேலும் இதுபோன்ற திட்டங்களில் பங்கேற்பதற்கான முடிவை உங்கள் தனிப்பட்ட நிதி நிலைமை மற்றும் இலக்குகளை கருத்தில் கொண்டு எடுக்க வேண்டும்.

புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தும் போது வங்கி வெகுமதி புள்ளிகள் மதிப்புமிக்க கருவியாக இருக்கும்.

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

# எங்கட ஆச்சி

- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -



எனக்கு சின்ன வயதில இருந்து எண்ணுறது எண்டது ஒரு பெரிய பொழுது போக்கு இல்லாட்டில் விளையாட்டு எண்டு தான் சொல்ல வேணும் .

ஆச்சி குசினியில பாவிச்சுப் போட்டு போடுற புளியங்கொட்டை எல்லாம் எடுத்து குவியலாக்கிப் போட்டு எண்ணுவன்.

இல்லாட்டில் கிழக்கு வளவுக்கை கிடக்கிற சறளைக் கும்பியில இருக்கிற சறளைக் கல்லுகளை குஞ்சுக் கடகத்தில அள்ளிக் கொண்டு வந்து முத்தத்தில போட்டு எண்ணுவன்.

பனங்காய் சீசனிலை மாடு சூப்பின ஆக்கள் சூப்பின பனங்கொட்டையளை வளவுவழியை போய் பொறுக்கிக் கொண்டு வந்த பனங்கொட்டையளை எல்லாம் கும்பலாக் குவிச்சுப் போட்டு எண்ணுவன்.

பிறகு உப்பிடியே கிழங்கு சீசனிலை கிழங்கு பிடுங்கின பிறகு காயப் போட்ட ஊமல் கொட்டையளை குவிச்சுப் போட்டு எண்ணுவன் . உப்பிடியே தண்ணி அள்ளப் போகேக்கை ஒழுங்கைவழியை மாடு



கள் எத்தினை இடத்தில சாணி போட்டிருக்குது எண்டும் எண்ணுவன் . உந்த நேசரியிலை சேர்ந்த பிறகும் கணக்கு செய்ய வெளிக்கிட விரல்களைப் பாவிச்சு அதுகும் கைவிரல்கள் எண்டில்லை பத்தாட்டி கால் விரல்களையும் பாவிச்சு எண்ணுவன். வேப்பம்பழ சீசனிலை விழுகிற பழங்களை பொறுக்கி காயப் போட்ட கொட்டையளையும் குவிச்சுப் போட்டு எண்ணுவன்.

பிள்ளையார் கோயிலுக்குப் போனன் எண்டால் எத்தினை பேர் எத்தினை தேங்காய் உடைக்கினம் எண்டு எண்ணுவன்.

அதிலும் வருசப் பிறப்புக்கு தேருக்கு முன்னால குவிச்சு வைச்சிருக்கிற தேங்காயளை சுத்தி சுத்தி வந்து எண்ணுவன்.

இப்பிடியே வளவுக்கை நிக்கிற மாமரம் எத்தினை காய் காச்சிருக்கு தென்னை எத்தினை காய்ச்சு இருக்கு முருங்கை மரம் எத்தினை காச்சு இருக்கு எண்டும் எண்ணிக் கொண்டிருப்பன் .

காகம், கிளி, கொக்கு பறந்தாலும் அண்ணாந்து பாத்து எண்ணிக் கொண்டிருப்பன் பக்கத்து வீட்டில அடை வைச்சு கோழி எத்தினை குஞ்சு பொரிச்சிருக்கு எண்டெல்லாம் எண்ணுவன் ஆகலும் பொழுது போகாட்டில் சாமி அறையுக்கை கிடக்கிற உண்டியலை ஒட்டைக்குள்ளாலை தென்னம் ஈக்கை விட்டு ஒட்டி காசுகளை குலுக்கி எடுத்து எண்ணி எண்ணி கொண்டிருப்பன.

சிலவேளை உப்பிடி எண்ணுறதப் பாத்துப் போட்டு ஆச்சி என்ன எண்ணி எண்ணிக்கொண்டே இருக்கிறாய் ஒரு வேலை வெட்டியும் செய்யிறேல்லையோ எண்டு எண்ணிக் கொண்டு இருக்கிறாயோ எண்டு பேசுவா.

இப்பிடி எண்ணுறது எண்டது என்ரை வாழக்கையில ஒரு முக்கியமான தொழிலாப் போச்சு.

எண்ணினாத்தானே என்னத்தையும் செய்யலாம் எண்ணாமல் என்னண்டு செய்யிறது .

அதால எல்லாரும் எண்ண வேணும்.

அப்பிடி எண்ணினால்தான் எதுவும் நடக்கும் . ஆனால் ஒண்டு சரியானதை எண்ணினால் சரியானது நடக்கும் பிழையானதை எண்ணினால் பிழையானது தான் நடக்கும்.

அதாலதான் பெரிய ஆக்கள் எண்ணின படிதான் எதுவும் நடக்கும் எண்டு சொல்லுறவையாக்கும் எண்டுவா எங்கட ஆச்சி.

உப்பிடிக் கன விசயங்களை நான் எண்ணி எண்ணித்தான் செய்யிறனான்.

எண்டாலும் இப்பிடி செய்யமுதல் கனதரம் என்ன செய்யலாம் எப்ப செய்யலாம் எப்பிடிச் செய்யலாம் எங்க செய்யலாம் செய்ய என்ன என்ன தேவை எண்டு நிறைய எண்ணி எண்ணித்தான் உதுகளைச் செய்தனான் . இப்பிடி எண்ணி எண்ணி எவ்வளவோ விசயங்கள் துணிஞ்சு செய்திருக்கிறன். உதைத்தான் திருவள்ளுவரும் எண்ணித் துணிக கருமம் எண்டு சொன்னவராக்கும்.

அதால நான் முந்திச் சொன்ன மாதிரி உந்த எண்ணுறதை என்னால ஒருக்காலும் விடேலாது அதுமாதிரி ஒருத்தரும் எனக்கு எண்ணத் தெரியாது எண்டு சொல்லவும் ஏலாது.



இப்பவும் சம்பளம் எடுத்த உடன எண்ணுவன். கடன் அட்டைக்கு எவ்வளவு பாங்க் லோன் எவ்வளவு தண்ணி பில் கரன்ட் பில் எவ்வளவு டெலிபோன் பில் எவ்வளவு பள்ளிக் கூடச் செலவு எவ்வளவு கறி புளி சாமான் சக்கட்டு வாங்க எவ்வளவு மருந்து மாத்திரை வாங்க எவ்வளவு எண்டு எண்ணி எண்ணித்தான் என்ரை வாழ்க்கை போகுது.

சில என்ரை எண்ண விசயங்கள் பிடிக்கேல்லை எண்டால் வீட்டம்மா என்ன எண்ணிக் கொண்டியள் என்ரை அப்பா அம்மா ஆரெண்டு எண்ணிக் கொண்டியள் .என்ரை இனசனம் ஆரெண்டு எண்ணிக் கொண்டியள் எண்டு எண்ணி எண்ணி பேசுவாள்.


எங்கயும் என்னத்தையும் எண்ணி எண்ணி எழுதிக்கொண்டு இருக்கேக்கை பெடி பெட்டை கூப்பிட்டாக் கேக்காது. உடன



அதுகள் அம்மா இஞ்சை பாருங்கோ அப்பா எங்களை என்ன எண்டு எண்ணிக் கொண்டு இருக்கிறார் எண்டுங்கள்.

தற்செயலா எங்கையும் படலையுக்கை கிடக்கிற கஞ்சலைக் கூட்டி விட்டுப் போட்டு கொஞ்சம் அள்ள மறந்தாலும் பக்கத்து வீட்டுக்காரன் வந்து என்ன எண்ணிக் கொண்டாய் எண்டுவான். உப்பிடி எண்ணுறது எண்டது தொடந்து என்ரை வாழ்க்கையில நடந்து கொண்டிருக்கு.

# வாழ்வின் பொருளியல் மதிப்பு என்ன?



2023 ஆம் ஆண்டுக்கான 'சர்வதேச புக்கர் விருது' பெற்ற 'டைம் ஷெல்டர்' (Time Shelter) நாவலில், அதன் ஆசிரியர் ஜியார்ஜி கொஸ்பொடினவ் இவ்வாறு எழுதியிருப்பார்:

'பொருள்களின் விலைகள் அதிகரிக்கும்போது வாழ்வின் மதிப்பு குறைந்துவிடுகிறது.'

இதை வாசிக்கும்போது ஓர் உண்மையைச் சட்டெனக் கண்ணெதிரே பார்த்த உணர்வு மேலிட்டது. நமது வாழ்வு விலைகொடுத்து வாங்க வேண்டிய பொருள்களாலும், சேவைகளாலும் இடைவிடாது பிணைந்திருக்கிறது. ஒருவகையில், நம் கைவசம் இருக்கும் பொருள்கள், நம்மால் பெறக்கூடிய சேவைகளைக் கொண்டே நம் வாழ்வின் மதிப்பை நாம் அளவிடும் சமூகச் சூழலும் தனிநபர் சூழலும் நிலவுகிறது.

மதிப்புமிகுந்த ஒரு பொருளைக் கைக்கொள்ளத் தவறுதல் என்பது பின்தங்கிவிடுகிற உணர்வையும், அதனால் தன்மதிப்பும், தான் வாழும் வாழ்வின் மதிப்புமே சற்றுக் குறைவானது என்கிற எண்ணம் தற்காலத்தில் நம் எல்லோர் மனதிலும் ஆழப் பதிந்திருக்கிறது. ஒரு பொருளுக்கான அல்லது சேவைக்கான மதிப்பு எவ்வாறு உருவாகிறது என்பதை இங்கே பேசப்போவதில்லை. அது ஆழமான பொருளாதார விவரிப்புகளைக் கோருவது.

**மத்தியதர உலகு:**

தாராளமயத்துக்குப் பிறகு இவ்வுலகே மத்தியதர உலகாக மாறிவிட்டிருக்கிறது. நம்முடைய கனவுகள் ஒன்று போலவே இருக்கின்றன. வாழ்க்கை மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டதாக மாறியிருப்பதால், நமக்குப் பல்வேறு அனுபவங்களின் சாத்தியம் இல்லாமல் போய்விட்டது என்பார் மெய்யியலாளர் ஹன்ஸ்கடமெர் (Hans-Georg Gadamer).

இதனை வேறு வகையில் சொன்னால், வாழ்வு தனித்தனியாகப் பிரிந்திருக்கும் ரயில் பெட்டிகளில் நிகழ்வதாக மாறியிருக்கிறது. ஒவ்வொரு ரயில் பெட்டியும் ஒவ்வொரு விதத்தில் இயங்குவதாக இருக்கிறது. உணவு, உடை, உறைவிடம் மட்டுமல்ல... கல்வியும் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக மாறியிருக்கிறது. நம் நாட்டில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்புவரை கல்விக்கு இவ்வளவு முக்கியத்துவம் இல்லை. ஒருவர் உயர்கல்வி கற்று, குறிப்பாகத் தொழில்நுட்பக் கல்வி கற்றுத் தேர்ந்தால், சந்தை அவரது வாழ்வைப் பார்த்துக் கொள்ளும் என்கிற நிலை உருவாகியிருக்கிறது.

பொருளாதாரரீதியாக வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கான எல்லா வாய்ப்புகளையும் சந்தை வழங்கியிருக்கிறது என்றால், சந்தையில் நுழைவதற்கான கடவுச்சீட்டைக் கல்வி வழங்கியிருக்கிறது. நான்காவது அடிப்படைத் தேவையும் உருவாகிவிட்ட பிறகு, ஐந்தாவதாக உடல்நலமும் இவற்றோடு இணைந்திருக்கிறது.

**மாறிப்போன தலைமுறை:**

நிதித் தேவை எந்தத் தலைமுறையைக் காட்டிலும் 2000-த்துக்குப் பிறகு, இளம் பருவத்தைக் கடக்கத் தொடங்கிய தலைமுறைக்குப் பெருகியிருக்கிறது.

அதிகப்படியாக வீட்டுக்கடனும் அதற்கு அடுத்த இடத்தில் தனிநபர் கடனும் இருக்கின்றன. வயது வாரியாகப் பார்த்தால் 40% தனிநபர் கடன் பெற்றவர்களின் வயது 35க்கும் குறைவு. திருமணம், உடல்நலச் செலவுகள் செய்யப்பட வேண்டிய வயதை எட்டுவதற்கு உள்ளாகவே தங்களது செலவுகளுக்காகத் தனிநபர் கடன்களை நாடுகின்றவர்கள் அதிகம். வீட்டுக்கடனைப் போல் அல்லாமல் தனிநபர் கடனில் இருந்து வருவாய் ஈட்டும் வாய்ப்பு மிகமிகக் குறைவு. ஏனெனில், அக்கடனுக்கான வட்டி அதிகம். சுற்றுலா, பங்குச் சந்தை முதலீட்டுக்கு, கைச்செலவுக்கு எனப் பெரும்பாலும் அவ்வப்போதைய நிதித் தேவைக்கு மட்டுமே தனிநபர் கடன்கள் பெறப்படுகின்றன. டிஜிட்டல் கடன் வழங்கும் செயலிகள் பெருகிய பிறகு வெறும் இருநூறு ரூபாய் கடன் பெறுவதற்கான வாய்ப்பும் அதிகரித்திருக்கிறது.

நம் பெற்றோர்களின் தலைமுறையோடு இதனை ஒப்பிடுவோம். அவர்களது காலத்தில் தனிநபர் கடன், கடன் அட்டை, வாகனக் கடன், வீட்டுவசதிப் பொருட்களுக்கான கடன் என எதுவுமே இவ்வளவு பரவலாக இல்லை.

தொழில்தொடங்குவதற்கான கடன்களை வழங்கும் நிறுவனங்கள் இருந்தன. அதைச் சமூகத்தில் மிகச் சிலர் மட்டுமே பெற்றுவந்தனர். ஆனால், தற்போது கல்லூரியில் இருந்து வெளியேவரும் மாணவர் ஒன்றில் பல இலட்சங்களைத் தீர்த்தவராக இருப்பார் அல்லது கடன் உடையவராக இருப்பார். இவை இரண்டுமே அவர் செய்தவை அல்ல என்றாலும், அவர் தலையில் கட்டப்பட்டவை. நாம் வருமானத்தை உற்பத்தி செய்பவர்களாக மட்டும் இல்லாமல், வட்டியை உற்பத்தி செய்பவர்களாகவும் மாறியிருக்கிறோம். செலவுகளைப் பட்டியலிடுவதைத் தாண்டி, இன்னின்ன கடனுக்கு இன்னின்ன வட்டி எனப் பட்டியலிட வேண்டிய நிலை.

**உளத்துணிச்சல் அவசியம்:**

முன்னைக் காட்டிலும் சேமிப்பின் அவசியம் உணரப்பட்டபோதும், சேமிப்பதற்கான வாய்ப்புகள் குறைந்துவருகின்றன. முதலீடுகளுக்கான வழிமுறைகள் எளிதாக மாறியிருப்பினும் நம்மில் பெரும்பாலானோரால் ஏன் சேமிக்கவோ முதலீடுகள் செய்யவோ முடியவில்லை? வருவாய் இடைவெளி பெருகியிருப்பதால் செல்வம் சேர்க்கும் வாய்ப்பு ஒருசிலருக்கே சாத்தியம் ஆகியிருக்கிறது.

குறைவான வருவாய் உடையவர்கள் சேமிப்பதற்கு மட்டுமல்ல, தங்களது அன்றாடத் தேவைகளை ஈடுகட்டவே போராட வேண்டியிருக்கிறது. 'டைம் ஷெல்டர்' நாவலில் சொல்லப்பட்டிருப்பதைப் போலத்தான், உணர்வுகள் என்பதைச் சோதிக்க நமக்குத் தனிக்கருவிகள் தேவையில்லை.

நிதிச்சூழலில் இருந்து நம்மால் தப்பிக்க முடியுமா? தற்போதைய சூழலில் அதற்கு அசாத்திய உளத்துணிச்சல் தேவைப்படும். இச்சூழல் பலரையும் தவறான முடிவுகளால் சிக்கலுக்கு உள்ளானவர்களாக மாற்றியிருப்பதை நாம் பார்க்கலாம்.

ஒரு தொடக்கத்தின் தன்மையைத் தீர்மானிப்பது அதன் முடிவுதான் என்பதால், நமது நிதித் தேவைக்காக நாம் நாடும் வழிமுறைகளின் இறுதிக் கட்டத்தைக் கணக்கிடுதல் ஒரு நல்ல வழிமுறை. கடன் பெறாமல் இருப்பது சாத்தியமில்லை எனினும், கூடுமானவரை நாம் போகத் தேவையில்லாத இடமாக அதைக் கருதுவது நல்லதுதான்.

# Taxpayer Identification Number




# வரி செலுத்துவோர் அடையாள எண்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வரி செலுத்துவோர் அடையாள எண்ணின் (TIN) சான்றிதழின் நகலைச் சமர்ப்பித்தல் பின்வருவனவற்றிற்கு கட்டாயத் தேவையாக்கப்பட்டள்ளது:-

a) எந்த வங்கியிலும் வங்கி நடப்புக் கணக்கைத் திறக்கும் சந்தர்ப்பத்தில்,

b) கட்டிடத் திட்டத்திற்கான ஒப்புதலை விண்ணப்பதாரர் பெறும் சந்தர்ப்பத்தில்,

c) மோட்டார் உரிமையாளர் வாகனத்தைப் பதிவு செய்யவும் அல்லது உரிமத்தைப் புதுப்பிக்கும் சந்தர்ப்பத்தில்,

d) நிலம் வாங்குபவரால் அல்லது நிலத்திற்கான உரிமையைப் பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில்.

நவம்பர் 30, 2023க்கு முன்னர் வருடாந்திர வருமான அறிக்கையை (வரி அறிக்கை) சமர்ப்பிக்கத் தவறிய வரி செலுத்துவோர் மீது உள்நாட்டு வருவாய்த்திணைக்களம் (IRD) கடுமையான தண் டனையை விதிக்க உள்ளது. தற்போதுள்ள உள்நாட்டு வருவாய் சட்டத்தின்படி 2022/2023 மதிப்பீட்டு ஆண்டிற்கான (அதாவது ஏப்ரல் 1, 2022 முதல் மார்ச் 31, 2023 வரை) ஆண்டு வருமான அறிக்கை 2023 நவம்பர் 30-ஆம் தேதிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று IRD ஆதாரங்கள் அறிவித்துள்ளன.

உரிய தேதிக்குள் அறிக்கையை சமர்ப்பிக்காமல் வரிக் கோப்புகளைப் பராமரிப்பவர்களுக்கு செலுத்த வேண்டிய வரியில் 5 சதவீதம் மற்றும் அபராதம் ரூ. 50,000 விதிக்கப்படும் என்று உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வருமான வரிக் கோப்புகள் திறக்கப்பட்டு நடைமுறை விளக்கம் அளிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. மேலும், RAMISல் காணப்படும் தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக 2022/2023 மதிப்பீட்டு ஆண்டிற்கான ஐவு அறிக்கையைச் சமர்ப்பிக்க, 48 மணிநேரம் கூடுதல் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக IRD அறிவித்தது.

இலங்கையில் TINIப் பெற, நீங்கள் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றலாம்:

1. உங்கள் வரி வகையைத் தீர்மானிக்கவும்:

• தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் வெவ்வேறு வரி வகைகளைக் கொண்டுள்ளன.

• தனிநபர்களுக்குரிய வரி வகை என்பது தனிநபர் வருமான வரி (IIT) அல்லது பரிந்துரைக்கப்பட்ட வரி (PT) ஆகும்.

• வணிகங்களைப் பொறுத்தவரை வரி வகை என்பது வணிக வகையைச் சார்ந்தது மற்றும் வருமான வரி (IT), தற்காலிக வரி (PT), பெறுமதி சேர் வரி (VAT), நிறுத்தி வைக்கும் வரி (WHT)> AIT> சமூக பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு (SSCL) ஆகியவையும் அடங்கும்.

2. பதிவுப் படிவத்தை பூர்த்தி செய்யவும்:

• ஒவ்வொரு வரி வகைக்கும் ஐ.ஆர்.டி (IRD) ஒரு பதிவுப் படிவத்தை வழங்குகின்றது.

• ஐ.ஆர்.டி(IRD) யின் இணையத்தளத்தில் இருந்து படிவத்தைப் பதிவிறக்கம் செய்யலாம் அல்லது ஐ.ஆர்.டி (IRD) அலுவலகத்தில் இருந்து அதைப் பெறலாம்.

3. பதிவுப் படிவத்தைச் சமர்ப்பிக்கவும்:

• நீங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுப் படிவத்தை ஐ.ஆர்.டி(IRD) அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்கலாம்.

• ஐ.ஆர்.டி(IRD)யின் தலைமை அலுவலகத்திற்கு தபால் மூலம் அல்லது ஐ.ஆர்.டி (IRD)யின் இணையச்சேவைகள் போர்டல் மூலம் ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம்.

4. உங்கள் TIN ஐப் பெறுங்கள்:

• IRD உங்கள் பதிவைச் செயலாக்கியதும் உங்களுக்கு TIN சான்றிதழ் வழங்கப்படும்.

• TIN சான்றிதழில் உங்கள் TIN எண், உங்கள் பெயர் அல்லது வணிகப் பெயர் மற்றும் உங்கள் வரி வகை என்பன இருக்கும்.

இலங்கையில் குறைந்த அளவிலான வரி இணக்கமானது நாட்டின் பொருளாதார

ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வரி தவிர்ப்புக்கான அடிப்படைக் காரணங்களைச் சமாளிக்கும் மற்றும் முறையான வரி அமைப்பில் அதிக பங்களிப்பை ஊக்குவிக்கும் பன்முக அணுகுமுறை தேவைப்படுகின்றது.

குறைந்த வரி இணங்குதல் மற்றும் வரி வலையை விரிவுபடுத்துவதற்கான உத்திகள்:

1. வரி முறையை எளிமையாக்குதல்: வரி முறையை நெறிப்படுத்துதல், வரி விகிதங்களைக் குறைத்தல் மற்றும் தேவையற்ற வரி விலக்குகளை நீக்குதல் ஆகியவை தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் வரி விதிமுறைகளைப் புரிந்துகொள்வதற்கும், இணங்குவதற்கும் எளிதாக இருக்கும்.

2. வரி செலுத்துவோரின் கல்வியை மேம்படுத்துதல்: தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு அவர்களின் வரிக் கடமைகள், வரி இணக்கத்தின் நன்மைகள் மற்றும் இணங்காததன் விளைவுகள் பற்றித் தெரிவிக்க விரிவான வரி செலுத்துவோர் கல்வித் திட்டங்களைச் செயற்படுத்தல்.

3. வரி அமலாக்கத்தை வலுப்படுத்துதல்: வரி நிர்வாகத் திறன்களை வலுப்படுத்துதல், தணிக்கை நடைமுறைகளை மேம்படுத்துதல், மற்றும் வரி ஏய்ப்பைத் தடுக்க இணங்காதவர்களுக்கு கடுமையான அபராதங்களை விதிக்கலாம்.

4. முறைசாரா பொருளாதாரத்தை இலக்காகக் கொள்ளுதல்: முறைசாரா வணிகங்களை முறையான வரி அமைப்பில் ஒருங்கிணைப்பதற்கான உத்திகளை உருவாக்குதல். இணக்கத்திற்கான ஊக்கத்தொகை வழங்குதல். பதிவு நடைமுறைகளை எளிதாக்குதல் மற்றும் வரி மன்னிப்பு திட்டங்களை வழங்குதல் போன்றவை.

5. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவித்தல்: வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து, நம்பிக்கையை வளர்க்கவும், இணக்கத்தை ஊக்குவிக்கவும் வரி செலுத்துவோர் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை நிரூபித்தல்.

6. நவீன தொழில்நுட்ப அறிமுகம்: வரி தாக்கல், பணம் செலுத்துதல் செயல்முறைகள் மற்றும் தகவல் அணுகலை எளிமையாக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் இணங்குவதை எளிதாக்குகின்றது.

7. கலாசார காரணிகள் முறையாக நெறிப்படுத்துதல்: சமூகத் தலைவர்கள், மத நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களை ஒரு குடிமைக் கடமையாக ஊக்குவிக்கவும், நியாயமான மற்றும் சமமான வரி முறையின் நன்மைகளை முன்னிலைப்படுத்தவும் முறையாகப் பயன்படுத்தலாம்.

8. விரிவாக்கம் மற்றும் ஆதரவை அதிகரித்தல்: தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கான தகவல் மற்றும் ஆதரவு சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல். குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் வரி இணக்க செயன்முறையின் மூலம் அவர்களுக்கு வழிகாட்டுதல்.

9. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்: பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை உருவாக்கத்தை ஊக்குவிக்கவும், இது வரி வருவாயை அதிகரிக்க வழிவகுக்கும் மற்றும் கட்டாய அமலாக்க நடவடிக்கைகளின் மீதான நம்பிக்கையை குறைக்கும்.

10. வரி இணக்க கலாசாரத்தை வளர்ப்பது: தனிநபர் பொறுப்பு மற்றும் கூட்டு நல்வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம் வரி இணக்க கலாசாரத்தை உருவாக்குதல்.

இலங்கையில் TIN ஐப் பெறுவதன் மூலம் ஏற்படும் நன்மைகள்

இலங்கையில் வரி செலுத்துவோர் அடையாள எண்ணைப் (TIN) பெறுவது தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் ஆகிய இரண்டிற்கும் பல நன்மைகளை வழங்குகின்றது.

• நீங்கள் இலங்கை வரிச் சட்டங்களுக்கு இணங்குவதை உறுதி செய்கின்றது.
• வரி செலுத்துவோர் மற்றும் ஐ.ஆர்.டி (IRD) ஆகிய இரண்டிற்கும் வரி நிர்வாக செயன்முறையை எளிதாக்குகின்றது.
• ஐ.ஆர்.டி (IRD) இன் இணையச் சேவைகளை அணுகுவதற்கு TIN தேவை. இது வசதியான ஆன்லைன் வரித் தாக்கல் மற்றும் பிற சேவைகளை வழங்குகின்றது.
• வரி அனுமதிச்சான்றிதழ் போன்ற பல்வேறு வரிச்சான்றிதழ்களைப் பெற TIN உதவுகின்றது.
• நிதி நம்பகத்தன்மை மற்றும் வணிக வாய்ப்புகளை மேம்படுத்துதல்.
• இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் சுங்க பரிவர்த்தனைகளை எளிதாக்குதல்.
• அரசு வருவாய் சேகரிப்பை ஆதரிக்கவும்.

இலங்கையில் வரி செலுத்துவோர் அடையாள எண்ணை (TIN) பெறுவதன் மூலம் பல நன்மைகள் இருந்தாலும், சில தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் அவ்வாறு செய்யத் தயங்குவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

அவற்றுள் பின்வருவன அடங்கும்:

1. தவறான வழிகாட்டல்/எண்ணங்கள் மற்றும் விழிப்புணர்வு இல்லாமை.
2. பதிவு செயன்முறையின் சிக்கலான தன்மை.
3. தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு பற்றிய நம்பகத்தன்மையின்மை / கவலைகள்.
4. வரித் தணிக்கை மற்றும் அபராதம் பற்றிய பயம்.
5. முறைசாரா பொருளாதாரம் மற்றும் வரித் தவிர்ப்பு.
6. கலாசார காரணிகள் மற்றும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இன்மை.
7. நிர்வாகச் சுமைகள் மற்றும் இணக்கச் செலவுகள்.
8. தகவல் மற்றும் ஆதரவுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல்.

**வரி செலுத்துவோர் அடையாள எண் (Taxpayer Identification Number - TIN) என்பது வரி நோக்கங்களுக்காக வரி செலுத்துவோரை அடையாளம் காண இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் (IRD) ஒதுக்கப்பட்ட தனித்துவமான எண்ணாகும். TINஆனது வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல் மற்றும் வரியைத் திரும்பப் பெறுதல் போன்ற பல்வேறு வரி தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.**

இந்த அடிப்படைக் காரணிகளை நிவர்த்தி செய்வதன் மூலமும் TIN பதிவின் நன்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும் IRD மற்றும் இலங்கை அரசாங்கம் முறையான வரி முறையில் அதிக இணக்கம் மற்றும் பங்கேற்பை ஊக்குவிக்க முடியும். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதி ஸ்திரத்தன்மைக்கு பங்களிக்கின்றது.

இலங்கையில் வரி இணக்கத்தை மேம்படுத்துவது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான அபிவிருத்திக்கு முக்கியமானதாகும். வரி ஏய்ப்பு மற்றும் இணக்கக் கலாசாரத்தை ஊக்குவிக்கும் அடிப்படைக் காரணிகளை நிவர்த்தி செய்வதற்கு வரி முறையை எளிமையாக்குதல், வரி செலுத்துவோர் கல்வியை மேம்படுத்துதல், வரி அமுலாக்கத்தை வலுப்படுத்துதல், முறைசாரா பொருளாதாரத்தை ஒருங்கிணைத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவித்தல், தொழில்நுட்பம், கலாச்சார காரணிகளை மேம்படுத்துதல், கலாச்சார காரணிகளை மேம்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய விரிவான அணுகுமுறை தேவைப்படுகின்றது.

விரிவாக்கம் மற்றும் ஆதரவு, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் வரி இணக்க கலாசாரத்தை வளர்ப்பது. இந்த உத்திகளை அமுல்படுத்துவதன் மூலம் இலங்கை தனது வரித்தளத்தை விரிவுபடுத்தவும், வரி வருவாயை அதிகரிக்கவும், வெளிநாட்டுக் கடன்களை நம்பியிருப்பதைக் குறைக்கவும், மேலும் வளமான மற்றும் சமமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

# குடிசை கைத்தொழில் ஆரம்பித்து பிரபல தொழிலதிபரானது எப்படி?



## தொழிலதிபர் முத்தையா

நேர்கண்டவர் - இக்பால் அலி

தொழிலதிபர் எஸ்.முத்தையா மனித நேயமும், சிறந்த வியாபார ஆற்றலும், சமூக செயற்பாடும் உள்ள இலங்கையின் பிரபலமான தொழில் அதிபர். பிரபல பிஸ்கட் நிறுவனத்தின் அதிபதி. பிரபலமான வர்த்தகர் மட்டுமல்ல இலக்கியப் புரவலர், சமூகப் பணியாளர், மற்றும் இந்து சமய அறங் காவலர் என அவருக்கு பல முகங்கள். இத்தகைய பல்வேறு சிறப்புக்களைப் பெற்ற தொழிலதிபர் எஸ்.முத்தையா தமிழர் பொருண்மியம் பத்திரிகைக்கு வழங்கும் செவ்வியில் தனது அனுபவங்களை பகிர்ந்துகொள்கிறார்.

**கேள்வி -** நீங்கள் வர்த்தகத் துறைக்கு வந்ததற்கு காரணமான பின்புலத்தை சொல்ல முடியுமா?

**பதில் -** நான் தோட்டப் பிரதேசத்தில் மஸ்கெலியாவிலுள்ள ப்ளுபீல்ட் தோட்டத்தில் பிறந்தவன். கடும் பனியிலும், குளிரிலும் வாழ்ந்தவன். தாய் தந்தையரின் இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்வில் ஒட்டி வாழ்ந்தவன். அப்பா பெயர் சின்னசாமி கவுந்தர். அம்மா சின்னச்சாமி அங்கம்மாள்.

1956 களில் கல்வியின் பால் நாட்டம் கொண்டு கல்வி கற்பதற்காக கண்டி வந்தேன். கண்டி கச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள பாரத மாதா என அழைக்கப்படும் இன்றைய விவேகானந்த தமிழ் மகா வித்தியாலத்தில் கல்வி கற்றேன். நான் சிறிய பையன். அப்பொழுது நான் கேசர் வீதியில் தங்கியிருந்தேன். 1958 களில் சிங்கள தமிழ் மக்களுக்கிடையில் "சிறி" பிரச்சினை எழுந்தது. அதன்போது கண்டி நகரில் பல தமிழ்க் கடைகள் தாக்கு தலுக்கு உள்ளாகி எரியூட்டப்பட்டன. தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இதனை நான் தங்கியிருந்த இடத்தின் மேல் மாடியிலிருந்து அச்சத்துடன் பார்த்த ஞாபகம் இன்னும் இருக்கிறது.

எனினும் தொடர்ந்து அப்பாடசாலையிலேயே எஸ். எஸ்.சி வரையிலும் படித்தேன். 1964 களில் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வியாபாரத் துறைக்குச் சென்றேன்.

நான் சிறிய வயதில் 50 ரூபா சம்பளத்திற்கு வேலை செய்தேன். இதன் மூலம் குடும்ப பாரத்தையோ பெருளாதார நெருக்கடியினையோ சமாளிக்க முடியாது என்ற எண்ணம் எனக்குள் தொடர்ந்து இருந்தது. பின்னர் தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் தம் குறைந்த வருமானத்தில் படும் அவஸ்தையை நேரடியாக கண்டு துயருற்றுள்ளேன். தன்னுடைய வாழ்வாதாரத்தை கட்டி எழுப்ப முடியாமல் அல்லல்படுவதை நான் சின்ன வயதில் இருந்து அவதானித்து வந்தேன். இப்படிப்பட்ட இந்த பொருளாதார நெருக்கடி நிலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற இலட்சியமும் வர்த்தகத் துறையில் முன்னேற வேண்டும் என்னும் ஈடுபாடும் எனக்குள் ஏற்பட்டது. இந்த எண்ணங்கள் என் உள்ளத்தில் திரும்பத் திரும்ப மீட்டிக் கொண்டே இருந்தன.

அதன் பின்னர் 1964 களில் எனது அண்ணன் சின்னச்சாமி ராமசாமியுடன் ரத்தரம் பொத்தவில் அமைந்துள்ள லக்கிலேண்ட் பிஸ்கட் கம்பனியில் இணைந்து கொண்டேன். ஒரு சாதாரண குடிசைக் கைத்தொழில் துறையின் மூலம் வர்த்தகத்திற்குள் நுழைந்தேன். அன்றிலிருந்து இன்று வரையிலும் 60 வருடங்களாக அயாராது பாடுபட்டுழைத்து வருகின்றேன்.

அது உயர்தர பிஸ்கட் கம்பனியாக வளர்ச்சி பெற்று பெரும் சாதனைகளுடன் எங்கேயோ நிற்கிறேன் எனக் கருகின்றேன்.

இன்று இது உயர்ந்த நிறுவனமாகும். ஆதி நவீன தொழில் நுட்ப மின் இயந்திர உபகரணங்களுடன் 200 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி செயற்பட்டு வருகின்றது. அக்கால கட்டத்தில் ஓர் இறாத்தல் பிஸ்கட் 50 சதத்திற்கு விற்பனை செய்திருக்கின்றேன். அப்பொழுது நவீன தொழில் நுட்ப கருவிகள் இல்லை. எல்லா வேலைகளும் கைகளால் தான் செய்யப்படும். எனது குடும்ப வாழ்வியலும் இப்படித்தான் ஆரம்பமாயிற்று.

**கேள்வி -** உங்களது வியாபாரப் பயணத்தில் தடைகள் எவையையும் எதிர்நோக்கவில்லையா?

**பதில் -** என்னதான் காலத்துடன் போட்டி போட்டு பயணித்தாலும் ஏதோ ஒரு கட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் சூழ்நிலைக் கைதியாய்தான் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அது எனக்கும் ஏற்பட்டது. அதை நினைத்தால் மனசு அதிகமாய் துடிக்கத் தொடங்குகிறது.

1977 இல் இடம்பெற்ற இனக் கலவரத்தில் நான் உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று தான் சொல்ல வேண்டும். இந்தக் கலவரம் இடம்பெற்ற போது, தொழில்சாலையில் நான் மனைவி பிள்ளைகள் மட்டும்தான் இருந்தோம். தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள் எல்லோரும் ஓடிவிட்டார்கள். இரவில் பெரும் கூட்டத்தினர் எம்மிடத்தை நோக்கித் திரண்டு வந்தனர். அவர்கள் கதவை உடைத்து உள் நுழைந்தார்கள். நான் தனியாக நின்று இருந்தேன். என்னைத் தாக்கி விட்டு முதுகில் வாளால் வெட்டினார்கள். கையிலும் சிறு காயம். நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு முதுகில் எட்டுத் தையல்கள் போடப்பட்டிருந்தன.

இப்படி பாதிக்கப்பட்டாலும் மீண்டும் மீட்சி பெற்று நீளும் பயணத்தின் எதிர்பார்ப்புக்களை வெற்றி கொள்வதற்கு உறுதியாய் இருந்தேன்.

நாட்டின் நடைமுறைக் கோணல்தான் காரணம் என உணர்ந்து சற்று கூர்மையாக சிந்தித்து சுற்று வட்டாரத்திலுள்ள பெரும்பான்மை சகோதார மக்களுடன் நெருக்கமான சிநேகிதத்துடன் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டேன்.

பின்னர் 1983 இல் ஜுலைக் கலவரம் இடம்பெற்றது. அதன் போது சுற்று வட்டாரத்திலுள்ள மக்களே திரண்டு வந்து பாதுகாப்பு வழங்கினார்கள். தொழிற்சாலை தமிழ் மக்களைப் பாதுகாக்கும் ஒரு கேந்திர நிலையமாக விளங்கியது. அக்கம் பக்கத்திலுள்ள தமிழ் மக்களுக்கு இங்குதான் அடைக்கலம் கொடுத்திருந்தோம். பின்னர் பொலிஸார் இங்கு வந்து முகாமுக்கு அழைத்துச் சென்றார்கள்.

**1977 இல் இடம்பெற்ற இனக் கலவரத்தில் நான் உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று தான் சொல்ல வேண்டும். இந்தக் கலவரம் இடம்பெற்ற போது, தொழிற்சாலையில் நான் மனைவி பிள்ளைகள் மட்டும்தான் இருந்தோம். தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள் எல்லோரும் ஓடிவிட்டார்கள். இரவில் பெரும் கூட்டத்தினர் எம்மிடத்தை நோக்கி திரண்டு வந்தனர். அவர்கள் கதவை உடைத்து உள்நுழைந்தார்கள். நான் தனியாக நின்று இருந்தேன். என்னைத் தாக்கி விட்டு முதுகில் வாளால் வெட்டினார்கள்.**

**கேள்வி -** மலையகச் சூழலில் தமிழ் கலை இலக்கியத் துறையை ஊக்குவிப்பதற்கென நீங்கள் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பு சாட்சியாகவுள்ளது. வறிய நிலையிலுள்ள படைப்பாளிகளுக்கு நீங்கள் விளம்பரம் இல்லாமல் கையைவிரித்து நிறைய கைகொடுத்து உதவியுள்ளீர்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில் -** மலையக எழுத்தாளர்களைப் பொறுத்தவரையிலும் ஈழத்து இலக்கியத்தில் மலையக இலக்கியம் ஒரு தனித்துவப் பிரிவாக வளர்ந்திருக்கிறது. மலையகத் தோட்டங்களில் தமது இரத்தத்தை சொரிந்து இலங்கையின் வணிக மேம்பாட்டுக் காக இந்திய வம்சாவளித் தமிழர்கள் படும் அவஸ்தையைப் பற்றி இந்த இலக்கியம் வெளிப்படுத்துகின்றது. தானும் ஒரு இந்திய வம்சாவளித் தமிழ் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற வகையில் யதார்த்தபூர்வமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இலக்கியம் படைக்கின்ற எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு இயல்பாகவே ஏற்பட்டது.

அந்த அடிப்படையில் அதிகம் பேர் ஆக்கங்களை எழுதினாலும் அதனை நூலாகப் பதிப்பித்து வெளியிட முடியாத பொருளாதார நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் உள்ளனர். சிலர் நூல்களை மிகக் கஷ்டப்பட்டு பதிப்பித்து வெளிர்க்கொணர்ந்தாலும் அந்நூல்களை விநியோகம் செய்து இட்ட முதலைப் பெற்றுக்கொள்ள முடியாத போக்கையே காணக் கூடியதாக இருக்கிறது. இது ஒரு கவலையான செய்தியாகும். நான் இந்த செய்திகளைக் கேள்விப்பட்டதும் கண்டியில் இடம்பெறும் எந்தவொரு நூல் வெளியீட்டு விழாவாக இருந்தாலும் யார் அழைத்தாலும் தவறாமல் கலந்து கொள்வேன். நூலின் முதல் பிரதிகளையும் பெற்றுக் கொள்வேன்.

இன்னும் மலையகத்தில் இலை மறைக் காய்களாக எழுதி வரும் பல எழுத்தாளர்களுடைய நூல்களைப் பதிப்பிப்பதற்காக வேண்டி மறைமுகமானரீதியில் பண உதவிகள் எவ்வளவோ செய்துள்ளேன். அதனை நான் மலையக தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகத்தான் செய்தேன். இதனையே நான் பிரதான சமூகப் பணியாகவும் கொண்டு செயற்பட்டு வருகின்றேன்.

கண்டியில் தமிழ் இலக்கியத் துறையில் ஒரு மறுமலர்ச்சிக் காலம் இருந்தது. அக்கால கட்டத்தில் மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், கண்டி தமிழ் சங்கம், மலையக கலை இலக்கியப் பேரவை போன்ற அமைப்புக்களின் ஏற்பாட்டில் தமிழ் இலக்கியத் துறையில் பல்வேறு இலக்கிய நிகழ்வுகள் இடம்பெறும். இதன்போது பல நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களின் நூல்களின் முதல் பிரதியினைப் பெற்று அந்நூல் வெளியீட்டு விழாவுக்குப் பெருமை சேர்த்துள்ளேன்.

(21ஆம் பக்கம் பார்க்க)



# தமிழர்களின் நாட்கணிப்பு

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” தமிழர்களுடைய காலக்கணிப்பிற்கு இந்த எண்கள் மட்டுமல்ல அத்துடன் சேர்ந்தே பருவகாலமும் வானிலை மாற்றமும் துணை செய்து வந்திருக்கின்றன. இவைதவிரப் பறவைகள், விலங்குகள, பூச்சிகள் வண்டினங்கள் என பலவற்றினதும் நடவடிக்கைகளும் நமது முன்னோர்களின் காலத்தைக்கணிக்க உதவின.

இந்தக் காலத்தில் நாங்கள் நேரத்தைப் பார்த்து எதையும் செய்கிறோம். அந்தக் காலத்தில் பருவ மாறுதல்களை வைத்தே காலத்தை அளந்தார்கள் என்பது அதிசயமாக இல்லையா? ஒன்றைக்கவனியுங்கள் தற்கால மனிதன் ஒன்றும் கற்கால மனிதனைவிட சந்தோஷமாக இல்லை என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். இக்கால வசதிகள் வாய்ப்புகள் எதுவுமே இல்லாமல் அவர்களும் நேரத்தை கணித்தே வாழ்ந்தார்கள்.

நேரக் கணிப்பு இல்லாமல் சூரியனின் அசைவை வைத்தே அவர்களது தொழில் நடந்தது. இதை வைத்தே எம்மவர்கள் பஞ்சாங்கம் என்று ஒரு கணித நூலை உருவாக்கினார்கள். உலகம் முழுதும் இந்த பிரபஞ்சத்தில் ஏற்படும் மாற்றங்களையும் அந்த மாற்றங்களால் சமுதாயத்துக்கு வரப்போகும் கால மாறுதல்களையும் துல்லியமாக கணித்தார்கள்.

விவசாயிகள் ஒரு படி மேலே போய், மழை எப்போது வரும் கோடை எப்போது வரும் காற்று எப்போது வீசும் என சகல கால நிலைகளையும் சூழலை வைத்தே கணித்தார்கள். அந்த காலத்தில் எதைப் பயிரிடலாம் எதை பயிரிடக்கூடாது என்பதையும் கண்டனர். இவை சார்பாக ஏராளமான பழமொழிகளும் வழக்கிலுண்டு. “மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை,” “ வாறமழை தூறிக்காட்டாது” “ “ஈரப்புழுதியும் தாரமிரண்டும் தனக்குப்பகை” “ஆறோடினா நீரோடும்” இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

எங்களுடைய மக்களிடம் இவைபற்றிய ஏராளமான நாட்டார் கதைகள் உண்டு. கோடை காலத்திற்கும் பனிக்காலத்திற்கும் கூட பண்பாட்டு வழக்காற்றியல் சொற்கள் ஏராளம். அவர்களுடைய காலக்கணிப்பு அப்படித்தான். மழை வருமுன் வானத்தைப் பார்த்துச் சொல்வார்கள். கொத்துமேகம் கட்டி உடனேயே பார்கட்டி மேகம் மாறினால் இரண்டொருநாளில் மழை வரும் . சிறு பூச்சிகள் பூமிக்கு தாழ்வாக பறந்தால் மழை வரும். அதுவே மழை பெய்து கொண்டிருந்தால் வெயிலெறிக்கப்போகுது. என்றெல்லாம் என் தந்தை சொல்வார். அது சரியாகத்தான் இருக்கும்.

இன்றைக்கு நாம் அன்றாடம் வானிலை அறிக்கைகளை வானொலியிலும் தொலைக் காட்சியிலும் பார்க்கவும் கேட்கவும் செய்கிறோம் இந்தப் பழக்கம் எப்படி வந்தது. என்பதையும் அப்படி நாம் கேட்ட அறிக்கைகள் எத்தனை சரியாக நடக்கிறது. எங்கள் வீட்

டில் ஒரு பாட்டி இருந்தார். அவர் கேட்பார். 'அறுவத்திநாலாம் ஆண்டு புயலடிச்சதை ஏன் முதலே சொல்லயில்லை'. இப்ப சுனாமி வந்ததையும் ஆரும் சொல்லயில்ல பாட்டி இப்போது உயிரோடு இருந்தால் அந்தக் கேள்வியும் வரும். கடிகாரம் இல்லாத காலத்திலும் நாம் வாழ்ந்தோம். நேரத்தைப் பற்றி அலட்டிக்கொள்ளாமலே வாழ்ந்தோம் அன்றைக்கும் மத்தியானம் வரப்போகிற பசிக்காக பத்து மணிக்கே சமைப்பதும், இரவானதும் வரப்போகும் இருளை விரட்ட விறகும் எண்ணெயும் சேர்த்து வைப்பதும் நடக்கத்தான் செய்தன. இப்போதும் கவனியுங்கள். அன்றைக்கிருந்த சந்தோசம் இன்றைக்கு இல்லை.

உலகில் தொழிற்புரட்சி ஏற்பட்டு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஒரு குறித்த நேரத்தில் வேலைக்கு சமூகம் அளித்து குறித்த நேரத்தில் வேலைவிட்டுச் செல்லும் நிலை இருந்த போது தொழிற்தேர்ச்சி முறையில் தொழிலாளர்களை இயக்க இது அவசியமானது. எனவே காலம் காட்டிகள் கண்டுபிடிக்கப் பட்டன. வானொலிகள் முதல்முதலாக செய்திகளையோ நிகழ்ச்சிகளையோ ஒலிபரப்புமுன் நேரத்தை குறிப்பிடுவது அவசியமானது. எங்கோ நடந்த ஓர் அனர்த்தத்தை குறிப்பிடும் போது வானொலி தன் பெயரைக்கூறி நேரத்தையும் ஒளிபரப்பியது. காலப்போக்கில் மணித்தியாலத்துக்கு ஒருதடவை செய்திகள் ஒலிபரப்பாயின. இதைவைத்தே மக்கள் தொழில்களை செய்தனர்.


உலகப்புகழ் பெற்ற பிக்பென் கடிகாரம் இலண்டனில் நிறுவப்பட்டது அதற்கான வேலைகள் ஆயிரத்துதொளாயிரத்து நாற்பத்து மூன்றில் ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பதிலேயே அது திறக்கப்பட்டது. பீபீசீ வானொலி அதன் மணியோசையுடனேயே தன் ஒலிபரப்பை ஆரம்பிப்பதை வழக்கமாக கொண்டிருந்ததாம். அக்காலத்தே ஐரோப்பாவின் பெரும்பகுதிகளைக் கைப்பற்றியிருந்தது நாஸிப்படைகள் ஒலிபரப்பை ஆரம்பித்த பிக்பென்னின் ஒலி. அந்த ஒலியை துல்லியமாக ஆய்வு செய்த ஜெர்மானியர்கள் அன்றைக்கு அப்போது லண்டனில் நிலவிய காலநிலையை அறிந்து தமது விமானப்படையை அதற்கேற்ப செயற்படுத்தினார்களாம். அதை சில நாட்களில் கண்டுபிடித்த பிரித்தானியர் அதன்பின் பிக்பென்னின் ஒலியை ஒலிப்பதிவு செய்து வைத்து அதையே ஒலிபரப்ப தொடங்கினார்களாம். அப்போதைய ஐரோப்பிய நகரங்களை நகர மத்தியில் உயர்ந்த கோபுரத்தில் அமைக்கப்படும் ஒரு கடிகாரமே வழிநடத்தியது. இடத்துக்கிடம் தூக்கிச் செல்லக்கூடிய கடிகாரங்கள் இல்லை. என்றாலும் அனைத்து கடிகாரங்களும் துல்லியமான நேரத்தை சொல்லவில்லை என்ற நிலை வந்த போது தொழிற்சாலைகளும் போக்குவரத்துகளும் ஒன்றுடன் ஒன்று இணையாமல் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லும் நேரம் தாமதமாகியதால் ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்ததாக தெரிகிறது.

எனவே முதல்முதலாக பிரித்தானிய அரசாங்கம் எல்லா கடிகாரங்களும் 'கிறீன் விச்' நேரத்தையே பின்பற்ற வேண்டும் என்ற சட்டத்தை கொண்டுவந்தது. விநாடி சுத்தமாக உலகெங்கும் ஒரே நேர அட்டவணையொன்றை இந்த சட்டம் கொண்டு வந்தது. தொழிலாளர்களுக்கான போக்குவரத்து அட்டவணையை ரயில்வே மாற்றிக்கொண்டது மணியடித்தால் தொழிலை ஆரம்பித்து மணியடித்தால் வெளியே செல்லும் வாய்ப்பு தொழிலாளர்களுக்கு கிடைத்தது. முன்னரைப் போல தான் தொட்ட வேலை முடியும்வரை உழைக்க வேண்டியதில்லை.

சராசரியாக நாம் இன்றைக்கு பலதடவை நேரம் பார்க்கிறோம். இன்று காலையில் மணிக்கூடொன்றில் அலாரம் வைத்து விட்டுத் தூங்குகிறோம் அதிகாலையில் அது எழுப்பியதும், சமையலறைக்குள் செல்வோம். சமையலை செய்து கொண்டே பலதடவை நேரம் பார்க்கிறோம். சரியான நேரத்து வேலைகளை முடித்து பஸ்தரிப்பிடத்துக்கு ஓடுகிறோம். அலுவலகமோ வேறு வேலையோ உரிய நேரத்தில் தொடங்குகிறோம். ஒரே நேரத்தில் இடைவேளை வருகிறது. ஒரே நேரத்தில் மத்தியான உணவு நேரம். வீடு திரும்பும் நேரமும் இடையில் எமது வீட்டுத் தேவைகளுக்காக கடைகளில் செலவிடும் நேரத்தையும் கவனமாக ஆராய்கிறோம். வீடு திரும்பிய பின்னரும் ஆறரைக்கு ஆரம்பமாகவுள்ள தொலைக்காட்சியை ஆறு மணிக்கே திருகிவிட்டு அந்த அயர்வோடு இரவுச் சமையல் வீடுபெருக்குதல் என இரண்டு மூன்று வேலைகளையும் சேர்த்தே பார்க்கிறோம். பெரும் பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட அபத்தமான விளம்பரங்களையும் சீரியல்களையும் வேறு வழியின்றி பார்த்துத் தொலைக்கிறோம். மன அழுத்தம் தீராமல் வைத்தியரையும் பார்க்க வேண்டியதாகும். அந்த மருத்துவ செலவும் வந்துவிட்டதாக கருதும் நோயும் எம்மை மேலும் பலவீனமாக்கும்.

காலம் பொன்னானது என்கிறோம். இன்றைய உலகில் ஒரே வீட்டில் எத்தனை கடிகாரம். கைக்கடிகாரம் சுவரில் ஒன்று மேசையில் ஒன்று தொலைக்காட்சியில் ஒன்று மைக்றோவேவ் அடுப்பில் ஒன்று கைபேசியில் ஒன்று, வேலை செய்யும் கணினியில் என்று எங்கும் கடிகாரம் இருந்தாலும் அந்த கடிகாரப்படி நிகழ்ச்சிகளை செய்கிறோமா? என்றால் சம்பளம் பெறும் வேலையைத்தவிர வேறெதுவும் நேரத்தை மதித்து செய்வது இல்லை எனலாம்.

> காலம் பொன்னானது என்கிறோம். இன்றைய உலகில் ஒரே வீட்டில் எத்தனை கடிகாரம். கைக்கடிகாரம் சுவரில் ஒன்று மேசையில் ஒன்று தொலைக்காட்சியில் ஒன்று மைக்றோவேவ் அடுப்பில் ஒன்று கைபேசியில் ஒன்று, வேலை செய்யும் கணினியில் என்று எங்கும் கடிகாரம் இருந்தாலும் அந்த கடிகாரப்படி நிகழ்ச்சிகளை செய்கிறோமா என்றால் சம்பளம் பெறும் வேலையைத்தவிர வேறெதுவும் நேரத்தை மதித்து செய்வது இல்லை எனலாம்



# மலைவேம்பு வளர்ப்பு முறை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



மலைவேம்பானது "மீளியா டுபியா" என்ற தாவரவியல் பெயரைக் கொண்டது.

இதனை மசவேம்பு என்றும் அழைக்கின்றார்கள். மலைவேம்பானது 100 அடி வரை பிரம்மாண்டமாக வளரக்கூடியதாகும். விரைவில் முதிர்ச்சி அடையும் பண்பு பல்வேறு தட்பவெட்ப சூழலில் வளரும் தன்மை..குறைந்த அளவிலான பராமரிப்பு. வியாபாரிகளிடம் உள்ள வரவேற்பு போன்ற காரணிகளாலே அதிகமான விவசாயிகள் இதனை விரும்பி நடுகை செய்கின்றார்கள்.

குறுகிய காலத்தில் அதிக லாபம் தரக்கூடிய மரம் வளர்ப்பு தொழிலில் மலைவேம்பு முதல் இடத்தில் உள்ளது என்றால் அது மிகையாகாது.

ஆம் அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் நடப்பட்டு. வெட்டப்படும் மர வகைகள் ஆன மாவு கனி, என்னம்பாளை, மலைவேம்பு போன்ற மரங்களில் மிகக் குறுகிய காலத்தில் அதிவேகமாக வளரக்கூடிய மரமாகும். வடகிழக்கு மாகாணங்களில் உள்ள விவசாயிகள் மலைவேம்பினை நடுகை செய்வது மிக மிகக் குறைவு. மாறாக மத்திய மாகாணம் வடமத்திய மாகாணம் போன்ற பிரதேசங்களில் தற்பொழுது வரை அங்குள்ள விவசாயிகளால் அதிக அளவில் நடுகை செய்யப்படுகின்றது.

ஒரு சில இடங்களில் வீதி ஓரங்களிலும் நிழல் மரமாக மலைவேம்பு நடப்பட்டுள்ளது. மலைவேம்பினை பற்றி ஒரு சில விவசாயிகள் அறிந்திருக்க மாட்டார்கள் மலைவேம்பின் தண்டானது. வேப்பம் தண்டினை ஒத்ததாக சற்று பெரிதாக இருக்கும். அதேபோன்று இலைகளும் வேப்பம் இலையை ஒத்ததாக சற்று பெரிதாக இருக்கும். தச்சர்கள் இம்மரங்களை பயன்படுத்துவது குறைவாக இருந்தாலும் இம்மரம் அதிகமாக தீக்குச்சி, பிளைவுட், பென்சில், சிறுவர்களுக்குரிய பொம்மைகள், பிரேதப் பெட்டி போன்ற அதிகமான பொருட்கள் தயாரிக்க பயன்படுவது மட்டுமின்றி. கட்டட வேலைகளுக்கும் பயன்படுத்துகின்றார்கள். இம்மரமானது மிகவும் பாரம் குறைந்த மரம் என்பதனால். ஒரு சில கிராமங்களில் உள்ள மீனவர்கள் தங்களுடைய சிறிய குளங்களில் மீன் பிடிப்பதற்காக மலைவேம்பு போன்ற பெரும் மரங்களில் சிறிய தோனீக்களை செய்து பயன்படுத்துகின்றார்கள். பல இடங்களில் தற்பொழுது மலைவேம்பை நிழல் மரமாகவும். மூலிகை தேவைக்காகவும் நடுகை செய்கின்றார்கள்.

ஆம் இயற்கை மருத்துவத்தில் மலைவேம்பு துளிர்களை அதிகளவில் பயன்படுத்துகின்றார்கள்.

சதுப்பு நிலங்கள், மணல் மண் அதிகம் உள்ள இடங்கள் குறிப்பாக கடற்கரை ஓரம் மற்றும் உவர் நிலங்கள். கற்பாறைகள் அதிகம் உள்ள இடங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து நிலங்களில்லும் குறிப்பாக செம்மண் நிலங்கள் மற்றும் இருவாட்டி மண், களி சார்ந்த மண் போன்ற நிலங்களில் மலைவேம்பு மரம் நடுகைக்கு ஏற்றதாகும், மலைவேம்பானது வேர்களில் இருந்தும்மரத்திலிருந்து பழுத்து விழுந்த விதைகளில் இருந்தும் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு நடப்படுகின்றது.

விதைகள் ஊடாக உற்பத்தி செய்வதாக இருந்தால் உலர்ந்த விதைகளை 8×4 பொலித்தின் பைகளில் நடுகை செய்து இரண்டடி வரை கண்டுகளை வளர்க்க வேண்டும் .

அதன் பிறகு பொழுதின் பைகளை அகற்றிவிட்டு ஒரு அடி, நீள, அகல, ஆழம் உள்ள குழிகளில் நட வேண்டும். இம்மரங்கள் நடும்போது 14 தொடக்கம் 16 அடி நீள அகல இடைவெளியில் அதாவது ஏக்கருக்கு கூடியது 200 மரங்கள் வரை நடுகை செய்யலாம். மேற்குறிப்பிட்ட இடைவெளிகள் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இடைவெளிகள் அதிகமானால் பரவாயில்லை.

மாறாக இரு மரங்களுக்கு இடையிலான இடை வழிகள் குறையும் பட்சத்தில் மரத்தின் சுற்றளவு அதாவது மரத்தின் பருமன் சிறிதாக இருப்பதோடு மரம் நீண்டு வளர ஆரம்பிக்கும். மரத்தின் சுற்றளவு அதிகமாக இருந்தால் மட்டுமே எமக்கு சந்தை வாய்ப்பு அதிகமாக இருக்கும். அதாவது கொள்வனவாளர்கள் மத்தியில் கேள்வி அதிகமாக இருக்கும். மலைவேம்பானது அதிக நீர் கட்டமைப்பை எடுத்துக் கொள்ளும் பயிராக இருக்காது மாறாக போதுமான நீர் கட்டமைப்பு இருந்தால் போதும்.

இதமான வெப்ப நிலை உள்ள இடங்களில் சிறப்பாக வளரக்கூடியது . மலைவேம்பானது பலம் குறைந்த மரம் என்பதனால் உயரமான இடங்களில் நடுகை செய்யக்கூடாது. காரணம் பலத்த காற்று வீசும்போது மரங்கள் முற்றாக உடைய வாய்ப்பு உள்ளது.

ஆகையால் தாழ்வான பகுதிகளில் உள்ள மேட்டு நிலங்களில் நடுகை செய்யலாம். இதற்கு மேலதிக உரப்பயன்பாடு தேவையில்லை.

போதுமானளவு நீர் வளம், மற்றும் மண் வளமாக இருந்தால் போதும். சிறப்பாக வளரும். மாறாக நீர் தேங்கி நிற்கும் இடங்களில் நடுகை செய்யக்கூடாது. மலைவேம்பு நடப்பட்ட இடத்தில் நீர் அதிகமாக இருந்தால் வேர் அழுகல் போன்ற நோய் ஏற்பட்டு மரம் முற்றாக இறந்து விடும்.

மலைவேம்பானது நடப்பட்ட நாளிலி

ருந்து ஒவ்வொரு வருடமும் மரத்தின் சுற்றளவானது எட்டு இஞ்சி அதாவது 20 சென்டிமீட்டர் அதிகரித்துக் கொண்டு இருக்கும்.

இதனால்தான் மலைவேம்பின் அறுவடைக்காலம் 7 தொடக்கம் 8 ஆண்டுகளில் வந்து விடும்.

அதாவது சாதாரணமாக மலைவேம்பு நடப்பட்ட நாளிலிருந்து எட்டாவது வருட முடிவில் 100 இல் இருந்து 120 கணையடி வரை மரத்தின் பருமன் வந்துவிடும். மலைவேம்பினை பொறுத்தவரை நோய் தாக்கம் மிக மிகக் குறைவு. காட்டு மரங்களைப் போன்று எந்த ஒரு பராமரிப்பும் இல்லாமல் தானாக வளரும் தன்மை உள்ளது.

இலையுதிர் காலங்களில் மட்டும் மலைவேம்பு இலையினை புழுக்கள் சாப்பிடுவது சற்று அதிகமாக இருக்கும். இருப்பினும் ஐயம்கொள்ளத்தேவையில்லை. அனைத்து இலைகளும் முற்றாக உதிர்ந்து மிக விரைவாகவே புதுத் துளிர்கள் வளர ஆரம்பிக்கும். விவசாயிகளிடம் வர்த்தகத் தேவை இருந்தால் 7 ஆண்டுகளுக்கு முன்பே அறுவடை செய்து விற்பனை செய்யலாம்.



விவசாயிகள் ஒன்றை நினைவில் வைக்க வேண்டும் மலைவேம்பானது நடப்பட்ட ஆரம்ப கட்டத்தில் அதன் வளர்ச்சி சற்று மந்தமாக இருக்கும். அதன் பிறகு அதாவது மூன்று ஆண்டுகளுக்கு பிறகு அதன் வளர்ச்சி மிக அபாரதமாக இருக்கும்.

ஒரு ஏக்கரில் மலைவேம்பு நடுகை செய்யப்பட்டிருந்தால் எட்டு ஆண்டுகள் முடிவில் அறுவடை செய்யும்போது அறுவடை செய்யப்பட்ட மொத்த மரத்தின் பெறுமதி அண்ணளவாக 75 லட்சம் ரூபாயாகக் கிடைக்கும்.

இந்தத் தொகையானது வெவ்வேறு மாவட்டங்களில் மலைவேம்புக்கு ஏற்படும் கேள்விக்கு ஏற்ப மாறுபடும். அதோடு



மேற்குறிப்பிட்ட வருமானம் ஆனது செலவு குறைந்த வருமானமாக கிடைக்கும். மேற்குறிப்பிட்டதை கருத்தில் கொண்டு நாளடைவில் மலைவேம்பின் வளர்ச்சி அபார விதமாக இருக்கும் என்பதால் நன்கு முற்றிய மலைவேம்பு மரங்கள் 12 to 15 ஆண்டுகளில் 250 கணையடி வரை வளரக்கூடியது.

அவ்வாறு வளர்ந்தால். உங்கள் வருமானம் மேல் கூறியதை காட்டிலும் இரட்டிப்புக்கு அதிகமாகக் கிடைக்கும்.

குறிப்பு இம் மரங்களை அனைத்து விவசாயிகளும். தங்களுடைய நிலங்களில் அல்லது ஏனையவரின் நிலத்தை குத்தகைக்கு எடுத்து யாருடைய அனுமதியும் இன்றி நடுகை செய்யலாம்.

அதிலும் குறிப்பாக மலைவேம்பு நடுகை செய்ய உத்தேசித்துள்ள காணிக்கு அனுமதிப்பத்திரம் (உறுதி) அல்லது வரைபடம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதோடு எவருடைய அனுமதியும் இன்றி மரத்தினை அறுவடை செய்து சந்தைப்படுத்தலாம்.

அதேபோன்று யாருடைய அனுமதியும் இன்றி அறுவடை செய்த மலைவேம்பினை வெவ்வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லலாம்.

காரணம் இலங்கை அரசின் சட்டத்திற்கு அமைய மலைவேம்பு உட்பட இன்னும் ஓரிரு மரங்களுக்கு அரசின் அனுமதியின்றி நடுகை செய்யலாம் அதோடு அரசின் அனுமதியின்றி அறுவடை செய்யலாம். அதேபோன்று அரசின் அனுமதியின்றி அனைத்து மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லலாம் என்ற அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மரப்பயிரும் பணப்பயிரே என்று எண்ணி இலகுவில் உற்பத்தி செய்யக்கூடிய மலைவேம்பினை விவசாயிகளாகிய நாங்கள் உற்பத்தி செய்ய வேண்டும். இம் மரங்களின் தேவை அதிகமாகவே உள்ளது, ஆகையால் ஐயப்பாடு இன்றி விவசாயிகள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தலாம். மேலதிக ஆலோசனை

அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் நடப்பட்டு. வெட்டப்படும் மர வகைகள் ஆன மாவு கனி, என்னம்பாளை, போன்ற மரங்களில் மிகக் குறுகிய காலத்தில் அதிவேகமாக வளரக்கூடிய மரமாகும். வடகிழக்கு மாகாணங்களில் உள்ள விவசாயிகள் மலைவேம்பினை நடுகை செய்வது மிக மிகக் குறைவு மாறாக மத்திய மாகாணம் வடமத்திய மாகாணம் போன்ற பிரதேசங்களில் தற்பொழுது வரை அங்குள்ள விவசாயிகளால் அதிக அளவில் நடுகை செய்யப்படுகின்றது.

தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.
**Ph: 0770239784**

# உங்கள் முன்னேற்றத்துக்கு உதவும் பழக்கங்களை எப்படி உருவாக்குவது?



“முன்னேற்றத்துக்கு உதவும் நல்ல பழக்க வழக்கங்கள் (Habits) குறித்து எக்கச்சக்கமான புத்தகங்கள் வெளிவந்து விட்டன. இன்னும் ஒரு புத்தகம் வேண்டுமா” என்ற கேள்வியுடன் ஆரம்பிக்கிறது ‘தி ரோட் ரூ பெட்டர் ஹபிட்ஸ்’ (The Road to Better Habits) என்கிற புத்தகம். நெதர்லாந்து நாட்டைச் சார்ந்த டேரியஸ் ஃபரூ (Darius Foroux) எழுதிய புத்தகம் இது.

### லொக்டௌன் உணர்த்திய உண்மைகள்

“நம்மில் பலரும், நான், நான், நான் என்ற எண்ணத்திலேயே நாளையும் பொழுதையும் கழித்து வருகிறோம். கோவிட்-19 வந்தபோது என்ன செய்தோம்? நம்மை காப்பாற்றிக்கொள்ளத் தவித்தோம். அதுவரை எதைப் பற்றியும் கவலைப்படாமல் வேலை வேலை என்று சுற்றிக்கொண்டிருந்த நாம் கொஞ்சம் நம்மைப் பற்றியும் நம்மைச் சுற்றியிருப்பவர்கள் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தோம்.

லொக்டௌன் வந்தபின் சிலர் நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க முயன்றனர். சிலர் நிறைய படிக்க ஆரம்பித்தனர். சிலர் உடற்பயிற்சியைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தனர். இப்படி பல விஷயங்கள் நடந்தன.

இதுதான் மனித மனத்தின் சைக்காலஜியே. ஏதாவது ஒன்று வெளியேயிருந்து வந்து நம்மை தாக்கும் போதுதான் (பெருந்தொற்றுநோய், போர் அல்லது நெருங்கிய மனிதர்கள் இறப்பு போன்ற) நமக்கு வாழ்க்கை குறித்த உச்சக்கட்டப் புரிதல் உருவாகிறது.

திடீரென்று, அர்த்தமற்ற இந்த வாழ்வின் அர்த்தம் குறித்து சிந்திக்கிறோம். ஏனென்றால், சாதாரண சூழ்நிலையில் அன்றாட வேலைகளின் பின்னால் ஓடிக்கொண்டே இருக்கும் நம்மில் பெரும்பாலானவர்களுக்கு இது குறித்து சிந்திக்கத் தோன்றுவதுமில்லை நேரமிருப்பதும் இல்லை. தூங்கி எழுதல், காலை டிபன், வேலைக்குப் போதல், மாலையில் வீடு திரும்புதல் என ஓடிக் கொண்டே இருப்போம். குடும்பத்தினருடன் ஏனோதானோ என்று நேரம் செலவழிப்போம். இப்படித்தானே பலரின் வாழ்க்கையும் சென்றுகொண்டு இருந்தது. ஆனால், மார்ச் 2020-ல் என்ன ஆனது?

மனித குலத்தைக் காக்க வீட்டைப் பூட்டிக்கொண்டு உள்ளேயே இருந்தோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. ஆனால், கோவிட்-19 முடிந்த பின் மறுபடியும் நான் - என் வேலை, ஆசை, உறவுகள் என்கிற ரீதியில் செயல்பட ஆரம்பித்துவிட்டோம்.

கோவிட்டுக்கு முன்னும், பின்னும் ஒரே ஒரு வித்தியாசம்தான். கோவிட்டுக்குப் பின் அதிக தீவிரத்தன்மையுடன் நான், எனது என்பது அதிகரித்துவிட்டது. ஏன் தெரியுமா? கோவிட்-19இன்போது தனிமையில் நம்முடைய சிந்தனைகளை வலுவேற்றிவிட்டோம். எக்கச்சக்கமாக நான், எனது என்பது பற்றியும் நம் ஆசைகள் மற்றும் பயங்கள் குறித்தும் மட்டுமே சிந்திப்பதில்தான் எல்லாமே தவறாகிப்போகிறது. கெட்டது எதுவும் எனக்கு நடந்துவிடவே கூடாது. நல்லது அனைத்தும் எனக்கு மட்டுமே நடக்க வேண்டும் என நினைக்கிறோம்.

இது போல, நம் ஆசைகளைத் துரத்தும் மோசமான பழக்கத்தை விட்டொழித்து நம்மை சுதந்திரமாக இருக்கவிடும் நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லித் தரும் நோக்கத்துடன் இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

### மாற்றத்துக்கு வழிவகுக்கும் பழக்க வழக்கங்கள்

இன்றைக்கு நாம் உலகம் இழுக்கும் இழுப்புக் கெல்லாம் வளைந்துகொடுக்காமல் வாழ்ந்து விட முடியாது. ஒரே அடியாக உலகத்தை ஒதுக்கிவிட்டு வாழ நினைத்தால், அது நம் மனநலத்துக்கும் உடல் நலத்துக்கும் கேடு விளைவித்துவிடும் என்பதே நிஜம். வாழ்வில் நல்ல விஷயங்களைக் கொண்டுவந்து சேர்க்க நீண்ட நாள் ஆகும். அதற்கு நிறைய நேரமும் சக்தியும் மனோதிடமும் தேவைப்படும்.

நல்ல ஆரோக்கியம் வேண்டுமெனில், தொடர்ந்து உடற்பயிற்சி செய்ய வேண்டும். சத்தான உணவை மட்டுமே உட்கொள்ள வேண்டும். மதுவும் துரித உணவும் கூடவே கூடாது. நல்ல உறவுகள் வேண்டும் என்றால் மனிதர்களுக்காக நேரம் ஒதுக்குதலும், முயற்சியும் வேண்டும். நல்ல வேலை வேண்டும் என்றால் வருடக் கணக்கில் நம்முடைய திறமைகளை வளர்த்தெடுத்து கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும்.

இவை எல்லாம் ஒரே நாளில் நடக்கிற காரியமில்லை என்பது நம் அனைவருக்குமே தெரிந்த ஒன்றுதானே! அப்புறம் ஏன் நம்மால் நல்வாழ்க்கையை நோக்கி நம்மை நகர்த்திச் செல்ல முடிவதில்லை? அதற்கான அடிப்படை பழக்கவழக்கங்கள் நம்மிடத்தில் விதைக்கப்பட வில்லை என்பதே காரணம்” என்று சொல்லும் ஆசிரியர், நல்வழிப்படுத்தும் பழக்கங்கள் குறித்து விவரிக்கிறார்.

### நல்வழிப்படுத்தும் பழக்கவழக்கங்கள்

“நல்ல பழக்கவழக்கங்களே நாம் செல்ல விரும்பும் திசைக்கு எதிர்திசையில் நம்மைக் கவர்ந்து இழுத்துச் செல்ல நினைக்கும் விஷயங்களில் இருந்து நம்மைக் காப்பாற்றும் கவசமாக இருக்கின்றன. எப்படி அந்தக் கவசத்தைப் பெறுவது?

நாம் தொடர்ந்து என்ன காரியங்களைச்

செய்து வருகிறோமோ, அவற்றின் மொத்த உருவம்தான் நாம். அதனால்தான் எதிலும் முதன்மை நிலை (Excellence) என்பது ஒரே ஒரு செயலின் மூலம் வருவதில்லை. நாம் தொடர்ந்து செய்யும் பல விஷயங்க ளாலேயே (Habit - பழக்கவழக்கம்) வருகி றது. முதன்மை நிலை எப்படியோ அதே போல்தான் மத்திம நிலை மற்றும் சாதா ரண நிலையும்.

நீங்கள் மத்திம அளவிலான செயல்களை செய்துவந்தீர்கள் எனில், நீங்கள் அந்த அளவுக்கான உயரத்தையே அடைவீர்கள் சாதாரண அளவிலான செயல்களையே செய்துவந்தீர்கள் எனில், சாதாரண நிலை யிலேயே இருப்பீர்கள்.

ஓ, அப்படியா? பழக்கவழக்கம் வாழ்க் கையை மாற்றிவிடுமா? என்று கேட்டால், அதற்கு 'ஆம்' என்பதுதான் பதில். அப்படி எனில், வெற்றி என்பது உத்தரவாதமானதா..? அப்படிச் சொல்ல முடியாது. அப்படி உத்தர வாதம் தருகிறேன் எனப் பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

உதாரணமாக, மில்லியனர்களின் பழக்க வழக்கங்கள் என்பதைப் பட்டியலிட்டு அவற்றையெல்லாம் செய்தால் மில்லியனர் ஆகிவிடலாம் என்று கூறுகின்றனர். அவற்றை யெல்லாம் ஒன்றுவிடாமல் செய்து விட்டு நான் மில்லியனர் ஆகவில்லை எனில், ஏன் ஆகவில்லை என்று கேட்க முடியாது.

உதாரணமாக, பணக்காரர்கள் எல லோரும் அதிகாலையில் எழும் பழக்கத் தைக் கொண்டு உள்ளனர் என்று படிக்கி றோம். அப்படி எனில், அன்றாடம் அதிகாலை யில் எழுந்தால் பணக்காரராகிவிட முடியுமா? முடியாது. அதிகாலையில் எழுவது, குளிர்ந்த நீரில் குளிப்பது, கஷ்டப்பட்டு வேலை செய் வது என்ற மூன்றும் உங்களைப் பணக்கா ரர் ஆக்கி விடாது.

கஷ்டப்பட்டு வேலை செய்தல், நேரம் தவறாமையை அனுசரித்தல், பளிச் சென்ற சுத்தமான சட்டை அணிதல், வாசனைத் திரவியம் உபயோகித்தல் போன்ற பல விஷயங்கள் எல்லாம் ஒருவருக்கு வெற்றி யைக் கொண்டு வந்து சேர்க்காது. இவை யெல்லாம் வெற்றியாளருக்கு உதவியாக இருக்குமே தவிர, இவை மட்டுமே வெற் றியைக் கொண்டுவந்து சேர்த்துவிடாது.

இந்த வகை மேற்கோள்களைப் பார்ப் பதில் இன்னுமொரு சிக்கலும் இருக்கிறது. இவற்றை எல்லாம் செய்து வெற்றி பெற்ற வர்கள் மட்டுமே நம் கண்ணுக்குத் தெரிகின் றனர். இவற்றை எல்லாம் செய்து தோல்வி அடைந்தவர்கள் நம் கண்ணுக்குத் தெரி வதே இல்லை. இதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவேதான், பழக்கவழக்கங்கள் என்று கூறும்போது வெற்றியைக் குறித்து பேசுவதே இல்லை. அப்படிப் பேசுவதிலும் அர்த்தம் ஏதுமில்லை" என்று சொல்லும் ஆசிரியர், சரியான பழக்கங்களை உருவாக் கிக் கொள்ளும் வழிகளைச் சொல்கிறார்.

"சரியான பழக்க வழக்கங்களை உரு வாக்கிக் கொள்வது எப்படி என்று கேட்கிறீர் களா? அதில் ஐந்து படிநிலைகள் இருக் கின்றன.

முதலாவதாக, உங்களுக்குச் சரிப்பட்டு வரும் வகையிலான பழக்கவழக்கங் களை நீங்கள் தேர்ந்தெடுப்பது. ஏனென்றால், எல்லா பழக்கங்களுமே எல்லாருக்கும் உகந்ததாக இருப்பதில்லை. எழுத்தாளர் ஒருவர் அதிகாலையில் எழ வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. எழுதுவதற்கு நேரம் ஒதுக்கினால் போதும். ஆனால், பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யும் ஒரு நபர் கட்டாயம் எழுவது பயனைத் தரும். செய்திகள், கணக்கீடுகள் எல்லாவற் றையும் செய்து முடித்துவிட்டு சந்தை ஆரம்பிக்கும் நேரத்துக்கு வியாபாரத்துக்கு அவர் தயாராக இருக்க வேண்டும்.

எனவேதான், ஒரு பழக்கத்தை நீங்கள் உருவாக்க நினைக்கும்போது இது நம் முடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பயனளிப்பதாக இருக்குமா? என்ற கேள் வியை ஒருமுறைக்கு பலமுறை கேட்டுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒரு பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள சரியான காரணம் வேண்டும். அப்படி சரியான காரணங்களுக்காக உருவாக்கப்படும் பழக்கங்களையே நம்மால் நாள்பட தொடர்ந்து செய்ய முடியும்.

இரண்டாவதாக, ஒரு நேரத்தில் ஒரே ஒரு பழக்கத்தை உருவாக்க முயற்சி செய் யுங்கள். ஒரே நேரத்தில் பல விஷயத்தை நாம் பழக்கமாக்க நினைத்தால் நிச்சயம் அதில் தோல்வியையே சந்திப்போம். இப் படிச் செய்ய முயல்வது நம் திறமையை நாம் அதிகமாக எடைபோடுவதற்கு சமமா கும்.

வேலை, உடல்நலம், கற்றல், பணம் மற்றும் உறவு என்ற அனைத்துமே சேர்ந் ததுதான் நம்முடைய வாழ்க்கை. உங்க ளுடைய வாழ்க்கையை மாற்றமடையச் செய்ய நினைக்கும் வேளையில், இவை அனைத்திலும் நீங்கள் ஈடுபாடு காட்ட வேண்டியிருக்கும். ஆனால், ஒரு நேரத் தில் ஒரே ஒரு பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள மட்டுமே முயல வேண்டும்.

மூன்றாவதாக, நீங்கள் உருவாக்க நினைக்கும் பழக்கத்தில் அடைய வேண் டிய இலக்குகளை சிறியதாக வைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். ஏனென் றால், சின்னச் சின்ன விஷயங்களில் கவ னம் செலுத்துவதன் மூலம் அவற்றில் நல்ல அடித்தளத்தை நம்மால் அமைத்துக் கொள்ள முடியும். அப்படிச் செய்யாதவரை எதிலும் நம்மால் உருப்படியான முன்னேற் றத்தை அடைய முடியாது.

உதாரணமாக, தினமும் ஓட வேண் டும் என்று நினைக்கிறீர்கள் எனில், முத லில் தினமும் நடக்க ஆரம்பியுங்கள். ஒரு தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று

**மனித குலத்தைக் காக்க வீட்டைப் பூட்டிக்கொண்டு உள்ளேயே இருந்தோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. ஆனால், கோவிட்-19 முடிந்த பின் மறுபடியும் நான் - என் வேலை, ஆசை, உறவுகள் என்கிற ரீதியில் செயல்பட ஆரம்பித்துவிட்டோம்.**

நினைக்கிறீர்கள் எனில், முதலில் ஒரு வாடிக்கையாளரைப் பிடியுங்கள்.


நான்காவதாக, நீங்கள் செய்ய வேண் டியது. உங்களிடம் இருக்கும் கெட்ட பழக் கங்களை முதலில் விட்டொழியுங்கள். இதில் முக்கியமான விஷயம் என்ன என் றால், அனைத்து கெட்ட பழக்கங்களையும் ஒரே நேரத்தில் விட்டொழியுங்கள். இதை முயற்சி செய்து பாருங்கள். உங்கள் வாழ்க் கையில் பெரிய பலன்கள் கிடைக்கும்.

ஐந்தாவதாக, நல்ல பழக்கங்களை உருவாக்கும் முயற்சியில் உங்களுடைய வளர்ச்சியை அவ்வப்போது (முடிந்தால் தினம் தோறும்) அளவீடு செய்து பார்த்துக் கொள்ளுங்கள். வளர்ச்சி குறைவாக இருந் தால் வருத்தப்படவோ உங்களுக்கு நீங் களே தண்டனை தரவோ முயற்சி செய்யா தீர்கள்.

வளர்ச்சியை அளவீடு செய்வதன்மூலம் நீங்கள் முயற்சியை இன்னும் தேவைப்ப டும் அளவுக்கு அதிகரித்துக்கொள்ள வாய்ப் புள்ளது என்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம்" என்று சொல்லி ஊக்கப்படுத்துகி றார் ஆசிரியர்.

பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள் வது எப்படி என்பதை மிகவும் எளிய நடை யில் கூறும் இந்தப் புத்தகத்தை அனைவ ரும் படித்துப் பயன் பெறலாம்.

# சீசர் செய்வதன் உளவியல்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

அண்மைக்காலத்தில் குழந்தை பெறும் தாய்மார்களின் கணிசமான அளவினர் சிசேரியன் எனப்படும் சத்திரசிகிச்சை மூலமே குழந்தைகளை பெற்றுக்கொள்கின்றனர். பல தாய்மாரும் இயற்கையான குழந்தை பிறப்பை விட சீசர் செய்வது எளிது என நினைக்கத் தொடங்கும் காலமிது. சிறப்பான குழந்தை பிறப்பு நேரத்தை பெற ஜோசியர் மூலம் கணித்து பிள்ளை பெறும் நிலையும் உள்ளது. நிற்க. இந்த பதிவு மனித சிசேரியன் தொடர்பானது கிடையாது. விலங்குகளில் குறிப்பாக மாடுகளில் செய்யும் சிசேரியன். ஒரு கால்நடை வைத்தியராக இதனை பதிகிறேன்.

மாடுகள் கன்று ஈன முடியாத தருணங்கள் அடிக்கடி ஏற்படும். பெரிய கன்று என்றாலும், மிகச்சிறிய தாயின் இடுப்பு பகுதி காரணமாகவும், கன்று வரும் இடுப்பு எலும்பு பகுதி விரிவடையாமல் போவதாலும், கன்றின் தலையோ காலோ மடிந்தோ திரும்பி இருந்தாலோ, விபத்தில் சிக்கிய மாடாக இருந்தாலோ, தாய் மாடு கன்று தேவையான வலுவை கொண்டிராமையாலும் (நோய், சத்துக் குறைவால்) சிறிய மாட்டுக்கு பெரிய கன்றுகளை பெறும் விதமாக சினைப்படுத்தும் போதும் பெரும்பாலும் கன்று ஈன முடியாமல் போகும். இதைவிடவும் பல நுண்ணிய காரணங்கள் உள்ள போதும் அவற்றை இங்கு சொல்லவில்லை.

பொதுவாக முதல் ஈற்றில் உள்ள மாடுகளே கன்று ஈன சிரமப்படும். உண்மையில் மாட்டை பார்த்த மாத்திரத்தில் சிசேரியன் முடிவை எடுக்க முடியாது. உரிமையாளர்கள் சொல்லும் போது சில விடயங்கள் புலப்படும். பெண் உறுப்பினூடாக கைகளை செலுத்தி கன்றின் நிலையை அதன் தோற்றத்தை உணர வேண்டும். நவீன மனித மருத்துவத்தில் மீயுயர் ஒலிக்கதிர்கள் (Ultra sound scaner) மூலமான ஸ்கானிங் வசதிகள் காரணமாக குழந்தையின் இயல்பை அது பிறக்கும் சகல விடயங்களையும் அறிய முடியும்.



சில வேளைகளில் சேவிக்ஸ் (cervics) எனப்படும் கருப்பைக் கழுத்து திறக்கப்படாது மாடு கன்று ஈன பிரயத்தனப்படும்.



கன்று ஈனும் நாளும் சரியாக இருக்கும்.

இந்த மாதிரயான சந்தர்ப்பத்தில் சிசேரியன் முடிவை கட்டாயம் எடுக்க வேண்டும். பெரும்பாலும் மாடுகள் கன்று ஈன சிரமப்படும் போது கைகளை விட்டு கன்றை இழுக்கவே முயல்வோம். கன்று பிறக்கும் போது முன் கால்களை நீட்டியபடி தலையை நீட்டியுமே பிறக்கும். இது வழமையானது. சில வேளைகளில் பின் கால்களை நீட்டி பிறக்கும். தலை மடங்கியோ கால் மடங்கியோ இருந்தால் கன்று பெண் உறுப்பினூடாக வெளிவர சிரமப்படும். இந்த நிலையில் நாங்கள் கால்களை நிமித்தியோ தலையை சரிப்படுத்தியோ கன்றை இழுப்போம். சில வேளைகளில் கால்கள் வெளியே வந்து தலை மடங்கியிருக்கும். இப்படியான சந்தர்ப்பத்தில் கால்களை பலங்கொண்டு மட்டும் உள்ளே தள்ளி தலையை சரிப்படுத்தி பிறகு கன்றை இழுப்போம்.

கன்றை இழுப்பது ஒன்றும் லேசுப்பட்ட வேலை கிடையாது. கடுமையான பலம் தேவை. நாங்கள் வெளிவந்த கால்களை மீள தள்ளும் போது மாடானது கன்று ஈன பலங்கொண்டு முக்கும். தொடர்ச்சியான தள்ளுகை இழுவை காரணமாக களைத்து விடுவோம். சில வேளைகளில் மிகச்சிறிய பெண் வழியாயின் கால்களில் கயிறு கட்டி இழுத்து சரி பண்ணுவோம். கால்கள் வெளிவந்து மீள தள்ள வேண்டியேற்படும் கன்றின் கால்களில் மெல்லிய கயிறுகளை கட்டியே தள்ள வேண்டும். இல்லாது போனால் மறுபடி கால்களை இழுக்க முடியாது சிரமப்பட வேண்டும்.

கன்று இழுப்பதற்கு உதவியாளர் மிக அவசியம். பெண்கால்நடை வைத்தியர்கள் உண்மையில் பாவப்பட்டவர்கள். அவர்களால் கன்றை இழுப்பது என்பது சிரமமானது. அதுவும் பீல்ட் லெவலில் மிக கடினம். உதவியாளரின் உதவி மிக அவசியம். தற்போது சில கருவிகள் கன்றை இழுக்க உள்ள போதும் நடைமுறையில் அதன் சாத்தியத்தன்மை குறைவானது.

சில இடங்களில் நிற்கும் மக்களை உதவிக்கு அழைத்துத்தான் கன்றை இழுக்க வேண்டும். இப்படி இழுத்தும் கன்று வராது போகும் தருணங்களில் சீசர் செய்யும் முடிவுக்கு வருவோம். இதில் சிக்கல் என்னவென்றால் கன்றினை கடுமையாக இழுத்து களைத்திருப்போம். சிலவேளை கன்று கருப்பை எலும்புடன் எமது கைகளை சேர்த்து நசித்தும் இருக்கும். ஏன் கன்று கைகளை கடித்தும் இருக்கும். இந்த மாதிரி நேரங்களில் உடலில் சக்தியே இல்லாதது போல இருக்கும். கைகள் நடுங்கும். சீசர் செய்யும் போது சிரம்ப்படுவோம்.

இப்படி ஒரு சீசர் சிகிச்சை செய்து இரண்டு மூன்று நாட்களுக்கு உடல் வலிக்கும். தையல் நூல் வெட்டிய கைக்காயங்கள் மாறவே சில நாட்கள் எடுக்கும். சாப்பிடவே சிரமமாக இருக்கும். சில நேரங்களில் அடுத்தடுத்த நாட்களில் சீசர் செய்ய வேண்டி வரும். குறிப்பாக கன்று ஈனும் காலங்களில். மறுப்பும் சொல்ல முடியாது. உரிமையாளர் தெரிந்தவராகவோ நல்ல மாடாகவோ இருக்கும் மறுக்க முடியாது. நான் ஒரு நாளில் இரண்டு சீசரும் செய்திருக்கிறேன். அதில் ஒரு மாடு கருப்பை வெளித்தள்ளியிருந்தது. இந்த மாதிரி நிலை இன்னும் மோசமானது.

பெண்ணுறுப்பு வெளிவந்த மாடொன்றை மீள சிகிச்சையளித்திருந்த போது கன்று போட சிரமப்பட்டது. அது முதலே விபத்தில் சிக்கிய படியால் சத்திர சிகிச்சையே செய்தேன் எனினும் அது மீள கருப்பையை தள்ளிவிட்டது. என்னால் தனியே முடியாது என உணர்ந்து இன்னொரு கால் நடை வைத்தியரையும். சில உதவியாளரை வைத்துமே சிகிச்சையை செய்தேன்.

உண்மையில் மாடு கன்று போடவில்லை என பண்ணையாளர்கள சொல்லும் போது ஒரு அச்சமும் அலுப்பும் ஏற்படும். மிகப் பெரும் ஆயத்தங்களுடன் பல பொருட்களை கொண்டு செல்ல வேண்டும். பல மணி நேரங்களை பிடிக்கும் . அதிக உடல் உழைப்பும் தேவைப்படும் சிகிச்சை. சில வேளைகளில் நடு வெய்யிலில், கடும் மழைக்குள் காட்டுக்குள் வீதியில் வெட்ட வெளியில் செய்ய வேண்டி வரும். பண்ணையாளர்களின் உதவியும் இருக்காமல் போகக் கூடும் .

சிகிச்சையின் நடுவே கன்றோ மாடோ இறக்க நேரிடலாம். அதன் போது சிகிச்சையின் செலவை அறவிடவே கடினமாக இருக்கும். உரிமையாளரின் உணர்வுகள் வேறு மாதிரியிருக்கும். எனினும் தொடர்ச்சியாக இவற்றையெல்லாம் வெட்டியோடிக் கொண்டு உலகிலுள்ள கால்நடை வைத்தியர்கள் சளைக்காமல் செய்து வருகிறார்கள் என்பதை பதியத்தான் வேண்டும்.

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதி மிக்க படைப்பாளிகளின் திறமைக்கு ஊக்கமளிப்பதும், அதற்கு புத்துயிர் அளிப்பதும் நமது கடமையாகும். ஒவ்வொரு தமிழ் வர்த்தகப் பிரமுகரும் தமிழ் இலக்கியத்தின் மீது மேலான கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் என் கருத்து. இல்லையேல் எம்மால் முன் னோக்கி நகர முடியாமற் போய்விடும் என்கின்ற முக்கியமான செய்தியையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

**கேள்வி -** உங்களது மகன் முரளீதரன் பற்றி?

**பதில் -** கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் என் மகன் முரளீதரனைப் பற்றி உலகில் அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. சுழல் பந்து வீச்சில் உலகிலே பேசப்பட்ட சிறந்த வீரர். பந்து வீச்சில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தவர். அவர் ஒரு நாள் போட்டியில் 500 விக்கட்டுக் களையும், டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கட்டுகளையும் வீழ்த்தி சாதனை நிலைநாட்டியவர். "தூஸ்ரா" பாணியிலான பந்து வீச்சில் புதுமைபடைத்தவர்.

இதுவரையிலும் அதில் எந்தவீரரும் தேர்ச்சி பெறவில்லை. அவரது ஆளுமையையும் சிறப்பம்சங்களையும் நான் விலாவாரியாக விளக்கத் தேவையில்லை. அது உலகம் அறிந்து தரிசித்து வைத்துள்ள விடயம். மிக அமைதியானவர். கடின உழைப்பாளி. தன்னலம் பாராது சேவையாற்றக் கூடியவர்.

**கேள்வி -** கண்டி மெதமஹாநுவர முருகமலை சிறி முருகன் தேவஸ்தானத்தின் அறங்காவலராக பணியாற்றி வரும் நீங்கள் இந்து சமய மேம்பாட்டுக்காக ஆற்றி வரும் பங்களிப்பு என்ன?

**பதில் -** இயல்பாகவே சமய பக்தி வழிபாடுகளில் அதீத ஈடுபாடு எனக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல கோயில் நிர்மாணப் பணிகளுக்காக இல்லை எனச் சொல்லாமல் மனமுவந்து உதவி செய்வேன். யார் கேட்டாலும் அவற்றை சரியாக உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் வழங்கி வருகின்றேன். உழைப்பானது தனக்கு மட்டுமல்லாமல் பிறருக்கு கொடுத்து உதவியினால் மட்டும் தான் தொழிலின் விருத்தி அதிகரிக்கும். அதற்குப் பாதுகாப்பாகவும் அமையும். மற்றவர்களுக்கு கொடுத்துதவும் மனிதர்கள் ஒரு நாளும் தோல்வி அடையப் போவதில்லை. இதற்கு எங்கள் தொழில் நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலே போதுமானதாகும்.

மெதமஹாநுவர சிறி முருகமலைக் கோயிலின் அறங்காவலாளராக கடந்த 20 வருடங்களாக சமயப் பணிகள் ஆற்றி வருகின்றேன். ஆரம்பத்தில் தொழில் ரீதியாக சிரமங்கள் இருந்தன. ஆனாலும் சமயக் கடமை என்ற காரணத்தினால் முழுமையான பொறுப்பையும் ஏற்று சேவை புரிகின்றேன்.

என்னுடைய பவள விழாவும் என் மனைவி பெயரில் கோயிலின் வருமானத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட லக்ஷ்மி கல்யாண மண்டப திறப்பு விழாவும் அங்கு தான் மிக சிறப்பாக நடைபெற்றன.

இவ் வைபவத்தில் உயர் கல்வி, பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன், கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுக் குமார். லக்கி ஜயவர்தன மற்றும் இந்திய உதவித் தூதுவர் செல்வி இராதா வெங்கட்ராமன் உட்பட பெருந்தொகையிலான தமிழ், முஸ்லிம், சிங்கள பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் இரா. அ. இராமன் அவர்களினால் தொகுக்கப்பட்ட பவள விழா சிறப்பு மலர் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இக்கோயிலில் பொது நூலகம் ஒன்றும் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது. அதே வேளை எனக்கு எப்பொழுது உற்ற நண்பனாக இருப்பவர் ரஞ்ஜிதா முதலாளி பெருமாள் பழனியப்பன் அவர்கள்தான். புத்தாண்டுப் பண்டிகை வந்தால் அவர் கடைக்குச் சென்று எப்பொழுதும் கைமுழுத்தம் கொடுத்து முதல் பொருட்கள் வாங்குவேன். அவருக்கு என் மீது அதிக பிரியம். அது மட்டுமல்ல அவருடனே கொடுக்கல் வாங்கல் செய்து கொள்வேன். இத்தனை காலமும் அவருடன் மிகநெருக்கமான சிநேகிதராக பழகி வருகின்றேன்.

**கேள்வி -** உங்களது சமூப் பங்களிப்பு பல. அவை பற்றி சுருக்கமாக கூற முடியுமா?

**பதில் -** சமூகப் பணி எனும் போது இனம், மதம், மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் சேவையாற்றி வருகின்றேன். சுருக்கமாக கூறுவதாயின் பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல், அனர்த்தங்கள் ஏற்படும் போது உதவுதல் கல்வி மேம்பாட்டுக்காக சிங்கள தமிழ் , முஸ்லிம் என்ற பாகுபாடு பாராமல் பல்வேறுபட்ட வகையில் உதவிகள் செய்து வருகின்றேன். மலையக வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அதிகம் பங்களிப்புச் செய்துள்ளேன் என குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

இத்தகைய உங்களுடைய அரும்பணிகளுக்கென பல்வேறுபட்ட கௌரவங்கள் பாராட்டுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன அது குறித்து பல்வேறு பிரபல்யமான அமைப்புக்களினாலும் அரசாங்கத்தினாலும் பல தரப்பட்ட கௌரவப் பட்டங்கள் வழங்கி கௌரவித்துள்ளனர். ஜனசேவா சிரோன்மணி, அன்புமணி, சேவா ஜோதி, சமூக ஜோதி, சமூகச் சுடர் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

இரா. அ. இராமன் அவர்களினால் தொகுக்கப்பட்ட "சேவாஜோதி லக்கிலேண்ட் எஸ். முத்தையா பவள விழா நிகழ்வுகளின் நிஜங்கள்" எனும் நூலொன்றை வெளிக்கொணர்ந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.



# கடவுச் சீட்டைப் பெறுவதில் எதற்காக இந்த நெருக்கடி?




- அகிலன் -

நாட்டில் பொருளாதார நெருக்கடி உருவானதைத் தொடர்ந்து மக்களைக் கவரும் இடங்களில் முதலாவது இடத்தில் இருப்பது கடவுச் சீட்டு அலுவலகம்தான். தினசரி அதிகாலையிலேயே பத்தரமுல்லையிலுள்ள குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துக்கு முன்பாக கடவுச் சீட்டுக்களைப் பெறுவதற்காக மக்கள் குவிந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து தப்பிக்க வெளிநாடு செல்வது ஒன்றுதான் ஒரே வழி என்பது அவர்களின் மனங்களில் பதிந்திருக்கின்றது என்பதைத்தான் இது வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறு அதிகாலை முதலே குவியும் மக்களுக்கு எவ்வாறு கடவுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறிவதற்காக ஓர் ஆய்வை "தமிழர் பொருண்மியம்" முன்னெடுத்தது. அதில் கிடைத்த தகவல்களை வாசகர்களுக்காகத் தருகின்றோம்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் உள்ள இலங்கை நிர்வாக சேவை (SLAS) அதிகாரிகளின் பற்றாக்குறையானது கடவுச்சீட்டுகளை உரிய நேரத்தில் வழங்குவதை மோசமாக்குகிறது என இது தொடர்பாக ஆய்வு செய்தபோது தெரியவந்திருக்கின்றது. குடிவரவுத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் இதனை உறுதிப்படுத்தினார்கள். கடவுச் சீட்டுக்களை வழங்குவதில் ஏற்படும் கால தாமதத்துக்கு இது முதலாவது காரணம்.

### கடவுச் சீட்டுப் பற்றாக்குறை

இரண்டாவது காரணம் கடவுச் சீட்டுப் பற்றாக்குறை. புதிய கடவுச் சீட்டுகளின் பற்றாக்குறை காரணமாக ஆயிரக்கணக்கான விண்ணப்பதாரர்கள் தமக்கான கடவுச் சீட்டுகளை பெறுவதில் குறிப்பிடத்தக்க தாமதத்தை எதிர்கொள்வதாக திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன. இது ஆயிரக் கணக்கானதாக இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

கடவுச் சீட்டு விநியோகம் இப்போது பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. அதிகளவு விண்ணப்பங்கள் கிடைப்பதால், அதனை மாவட்ட அடிப்படையில் பன்முகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. தூர இடங்களில் இருப்பவர்கள் கொழும்புக்கு வந்து சிரமப்படுவதைத் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டே மாவட்ட ரீதியாக கடவுச் சீட்டு வழங்கும் நடைமுறை கொண்டுவரப்பட்டது.



இதற்காக, ஒன்லைனிலும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் நடைமுறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், தமது கைரேகைகளைச் சமர்ப்பித்த பின்னரும் கடவுச் சீட்டுக்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்தவாறே உள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஒன்லைனில் விண்ணப்பித்து கைரேகைகளைச் சமர்ப்பித்த பலரும் இவ்வாறு தாமதம் ஏற்படுவது தொடர்பாக முறைப்பாடு செய்கின்றார்கள்.

வடக்கில் வவுனியாவில் ஒரு நாள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், இதிலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக, அதிகாலையிலேயே சென்று இடம்பிடிப்பதில் முகவர்களின் ஆக்கிரமிப்பு அங்கு பிரதான பிரச்சினையாக இருக்கின்றது.

### பணியாளர்கள் பற்றாக்குறை

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள், இலங்கை நிர்வாக சேவை (SLAS) அதிகாரிகளின் பற்றாக்குறையால் திணைக்களத்தில் விண்ணப்பங்களைச் செயலாக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். உடனடியாக இதற்காக சிலரை ஆட்சேர்ப்பு செய்தால் இந்த நிலைமையை சமாளிக்கக் கூடியதாக இருக்கும் என்பதுதான் யதார்த்த நிலை.

ஆனால், அரச துறை ஆட்சேர்ப்பில் தொடர்ந்து முடக்கம் ஏற்பட்டுள்ளதால், பல ஆண்டுகளுக்குப் பிறகு தங்கள் பதவிகளில்



இருந்து வெளியேறும் அதிகாரிகளை மாற்றுவதற்கு நிர்வாக சேவை அதிகாரிகள் இல்லாத சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்பது தெரியவந்திருக்கின்றது.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப் பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இல்லுக்பிட்டிய இது தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை. "சில" பணியாளர் பற்றாக்குறை இருப்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

“எங்களுக்கு அதிகாரிகள் பற்றாக்குறை இருப்பதால் விண்ணப்பங்களை பரிசீலிப்பதில் சில தாமதங்கள் உள்ளன. தற்போது, எங்களின் தரவரிசையில் சுமார் 10 நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. மேலும், திணைக்களத்தில் ஒரு சில வெற்றிடங்கள் உள்ளன, எனவே நாங்கள் பெறும் ஆயிரக்கணக்கான பாஸ்போர்ட் விண்ணப்பங்களை சரிபார்த்து அங்கீகரிக்கக்கூடிய அதிகாரிகளின் பற்றாக்குறை உள்ளது” என்று இல்லுக்பிட்டிய கூறினார்.

### எந்தப் பதிலும் இல்லை

கடவுச்சீட்டு விண்ணப்பச் செயலாக்க முறைமையின் செயல்பாட்டுத் திறனை மீட்டெடுக்க நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு பல கோரிக்கைகளுக்குப் பதிலளிப்பதில் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலற்ற தன்மை குறித்து இலுக்பிட்டிய குற்றம் சாட்டினார்.

“நாங்கள் பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு பலமுறை கடிதம் எழுதியிருந்தோம். ஆனால் இன்று வரை எங்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரிகள் யாரும் அனுப்பப்படவில்லை. வெற்றிடங்களை நிரப்பத் தயாராக இருக்கும் பல நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு நாங்கள் கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் வழங்கியுள்ளோம், ஆனால் எந்த பதிலும் இல்லை” என்று இல்லுக்பிட்டிய குற்றஞ்சாட்டினார்.

இல்லுக்பிட்டியின் கூற்றுப்படி, அடுத்த ஆண்டு நிலைமை மோசமடையக்கூடும், 2024 இல் சேவையிலிருந்து வெளியேறும் நிர்வாக சேவை அதிகாரிகளை மாற்றுவதற்கான ஒதுக்கீடுகள் இன்னும் செய்யப்படவில்லை. பொருளாதார நிலைமையால் புதிய பணியாளர்களை வேலைக்கு அமர்த்துவதில் அரசாங்கம் சங்கடங்களை எதிர்கொள்கின்றது.



### ஒரு நாள் சேவை

தற்போதைய பணியாளர்கள் பற்றாக்குறையுடன், குறிப்பாக திணைக்களத்திற்கு நியமிக்கப்பட வேண்டிய நிர்வாக சேவை அதிகாரிகளின் பற்றாக்குறையுடன், திணைக்களத்தில் உள்ள எட்டு “ஒரு நாள் சேவை“ கவுன்டர்களில் நான்கு அல்லது ஐந்து மட்டுமே செயல்பட முடியும் என்றும் அவர் சொல்கிறார். அதாவது ஒரு தினசரி அடிப்படையில்.

“ஒரு நாள் சேவை”க்காக ஒரு சிறிய வரிசை உருவாகும் நாட்கள் உள்ளன, ஆனால் நாங்கள் அதை நிர்வகிக்க முயற்சிக்கிறோம். நான் கூட கவுன்டர்களில் உதவி செய்ய முன்வந்த சந்தர்ப்பங்கள் உண்டு” என்று இல்லுக்பிட்டிய கூறினார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முக்கியமான பதவிகளில் பணியாளர்கள் பற்றாக்குறை நிலவுவதாக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

“நிர்வாக சேவை அதிகாரிகளின் பற்றாக்குறை இருக்கும்போது, தினசரி அடிப்படையில் பெறப்படும் பாஸ்போர்ட் விண்ணப்பங்களின் அளவைக் கையாள்வது மிகவும் சவாலானது. சுமார் 10 நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான பணியிடங்கள் காலியாக உள்ளன. நிர்வாக சேவை அதிகாரிகளை நியமிப்பதில் சவால்கள் இருப்பதை நான் புரிந்துகொள்கிறேன். அரசு துறை ஆட்சேர்ப்பு பல ஆண்டுகளுக்கு முன்பே முடக்கப்பட்டது” என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### தேங்கிக்கிடக்கும் விண்ணப்பங்கள்

இதற்கிடையில், அச்சிடப்பட்ட பாஸ்போர்ட்டுகளில் பற்றாக்குறை இருப்பதாகவும், புதிய பாஸ்போர்ட்டுகள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் தேங்கிக் கிடப்பதாகவும் திணைக்களத்தின் வட்டாரங்கள் தெரிவித்தன. புதிய பாஸ்போர்ட்டுகளுக்கான கேள்வி மனுவை (ரெண்டரை) வழங்குவதில் ஏற்பட்ட தோல்வியே சிக்கலுக்கான ஒரு காரணம் என்று உள்ளக வட்டாரங்களிலிருந்து அறியக் கூடியதாக இருந்தது.

“பாஸ்போர்ட் வழங்குவதில் பின்னடைவு உள்ளது, இப்போது அது ஒரு பெரிய பிரச்சினையாகிவிட்டது. ஏறக்குறைய 9,000-10,000 பாஸ்போர்ட்டுகள் நிலுவையில் உள்ளன. இதில் ஒரு சிக்கல் என்னவென்றால், இந்த ஆண்டின் தொடக்கத்தில் வழங்கப்படவிருந்த முக்கிய ரெண்டர் இறுதி செய்யப்படவில்லை,” என்று குடிவரவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இதற்குப் பொறுப்பான அமைச்சர், “நீண்டகாலமாக நிலுவையில் உள்ளவை கூடிய விரைவில் அகற்றப்பட்டு வருகின்றன” என்று தெரிவித்தார். பல்லாயிரக்கணக்கான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன என்பதையும் அமைச்சர் மறுத்தார்.

அண்மையில் கடவுச் சீட்டு அலுவலகத்துக்குச் சென்ற போது ஒரு விடயத்தை தெளிவாகப் பார்க்க முடிந்தது. பெருமளவிலான இளைஞர்கள் ஒரு நாள் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக குவிகின்றார்கள். ஆனால், அதிகாரிகள் - குறைந்த அளவில் இருந்தாலும் கூட, பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுகின்றார்கள்.

இதனைால்தான் பத்தரமுல்லை கடவுச் சீட்டு அலுவலகத்தில் தினசரி ஆயிரக்கணக்கான கடவுச் சீட்டுக்களை வழங்க முடிகின்றது. அதேவேளையில், மாவட்ட சேவைகளில் மக்கள் நம்பிக்கையில்லாத நிலையையும் காணமுடிந்தது. மாவட்ட அடிப்படையில் கடவுச் சீட்டுக்களை வழங்கும் நடைமுறையைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம்ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதும் அவசியம்.

# முல்லை ஒய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!


*இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**






முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்







4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2023இல் வெளியிடப்பெற்றது.